Registered as a Newspaper பக்கங்கள் : 6 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 புரட்டாதி 9 25-09-94 ஞாயிற்றுக்கிழமை ஓசை 219

## க. பொ. த. (உயர்தர) பாடங்களில் மாற்றம் கொண்டுவர யோசனை

கல்விப் பொதுத் தராதர உயர் தரத்தின் முக்கிய சில பாடங்களில் மாற்றம் செய்யப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது. இம் மாற்றம் தொடர்பான ஆய்வு மகரகம தேசிய கல்வி நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெற்று வருவதாகவும் கொழும்பிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவ் ஆய்வில் உயர்கல்வி வள அதிகாரிகளும் விரைவில் கலந்து கொள்ள உள்ளதாகவும் இறுதியில் எடுக்கப்படும முடிவுக்கிணங்க மாற்றம் செய்யப்படவுள்ளதாகவும் மேலும் தெரிய (6 ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட முன் யுத்த நிறுத்தம் அறிவிக்க முடியாது!

## பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

[கொழும்பு]

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கு முன்னர் அரசாங்கம் யுத்தநிறுத்தம் ஒன்றை கொண்டுவரமாட்டாது எனவும், இவ்விடயத்தில் அரசாங்கம் வெகு நிதானமாக உள்ளது எனவும் சிறிலங்காவின் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த தெரிவித்தார்.

இரு தரப்பினரிடையேயும் பேச்சுவார்த்தைகள் நடைபெறாமல் யுத்த நிறுத்தம் தொடர்பாக தீர்க்கமான முடிவொன்றை எடுக்க முடியாது. அவ்வாறு இல்லாது பொறுப்பற்ற வகையில் யுத்த நிறுத்தத்தை அரசாங்கம் பிரகடனம் செய்ய முடியாது என மேலும் அவர் கூறினார்.

அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்திய பின்னரே இது குறித்து தீர்மானமொன்றை மேற்கொள்ள முடியும் எனவும் கேணல் அனுருத்த ரத்வத்த மேலும் தெரிவித்தார்.

## விபத்தில் மூவர் காயம்

(யாழ்ப்பாணம்)

நேற்று மாலை நடந்த வெவ்வேறு விபத்துக்களில் மூவர் காயமடைந்து யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கோண்டாவிலைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் என்பவர் மோட்டார் சைக்கிளுடன் விபத்துக்குள்ளாகியும் திருநெல்வேலியைச் சேர்ந்த செ. ராசா சாரல் போதனையிடும், மேலும் சிவடாதம் என்பவருமே விபத்துக்களால் காயமடைந்தவர்கள் ஆவர். (சி)

## தியாகி திலீபன் நினைவு நாட்கள் வன்னி பிரதேசத்தில் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

வன்னிப் பெரும் நிலப்பரப்பெங்கும் தியாகி லெப். கேணல் திலீபனின் ஏழாம் ஆண்டு நினைவு நாட்கள் பெரியளவில் அனுஷ்டிக்கப் பட்டுவருகிறது.

முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களிலும் திலீபனின் நினைவு நாட்கள் சிறப்பாக அனுஷ்டிக்கப்படுகின்றது.

பரவலாக திலீபனின் உருவப்படம் வைக்கப்பட்டுள்ள விசேட பந்தல்களில் பொதுமக்கள், மாணவர்கள், அரச, தனியார் ஊழியர்கள், வர்த்தகர்கள் கலந்து கொண்டு உண்ணாவிரதம் அனுஷ்டிக்கின்றனர்.

இதேமாதிரி பெரியளவில் பொதுமக்கள் திரண்டு வந்து சிரமதானங்களிலும் ஈடுபடுகின்றனர்.

நடைபெறும் பொதுக்கூட்டங்களில் திலீபனின் தியாகத்தை விளக்கும் உரைகளும் கலை நிகழ்வுகளும் நடைபெறுகின்றன. இப் பொதுக் கூட்டங்களில் பெரியளவில் மக்கள் திரண்டு வந்து கலந்து கொள்கின்றனர்.

இது இவ்வாறிருக்க, யாழ். குடாநாட்டில் நேற்று திலீபனின் பத்தாம் நாள் நிகழ்வு [6 ஆம் பக்கம் பார்க்க]

## வீரச்சாவு



2ஆம் லெப்டினன்ட் இராமசோழன் (ஜெயசேகர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த வியாழனன்று மாலை 7.00 மணியளவில் தவறுதலாக இடம்பெற்ற வெடி விபத்தொன்றில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

வீரச்சாவடைந்த 2ஆம் லெப். இராமசோழன் / ஜெயசேகர் (மாணிக்கப்போடி முருகமூர்த்தி, மட்டக்களப்பு)

## தேசிய புலனாய்வு பணியகத்தின் செயற்பாடுகளுக்கு கட்டுப்பாடு

(கொழும்பு)

தேசிய புலனாய்வு சேவை அடுத்தமாதம்முதல் புனரமைப்பு செய்யப்படவுள்ளது. இதுபற்றி சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தகவல் தருகையில் தேசிய புலனாய்வு சேவை நிலையத்தின் பணிகள் மட்டுப்படுத்தப்பட்டதாகவும் இது பாதுகாப்பு அமைச்சின் கீழ் செயற்பட இருப்பதாகவும், இப் பிரிவு ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு பணிகளை மட்டுமே இனி மேற்கொள்ளும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் அந்தரங்க தகவல்களை சேகரிக்கும் இரகசிய பிரிவு தொடர்ந்து பொலிஸ் மா அதிபரின் கட்டுப்பாட்டில் இருக்கும் எனவும், நாடு சுதந்திரம் பெற்ற காலம் முதல் இரகசிய தகவல்களை சேகரிக்கும் பணி விசேட பிரிவினால் மேற்கொள்ளப்பட்டது எனவும், இரகசிய பொலிஸ் சேவைப் பிரிவு கடந்த அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டு பாதுகாப்பு [6 ஆம் பக்கம் பார்க்க]

## தியாகி லெப். கேணல் திலீபன் நினைவாக கோட்டரீதியாக நாளை உண்ணாவிரத நிகழ்வுகள்

தியாகி லெப். கேணல் திலீபனின் 7-ம் ஆண்டு நினைவு நாட்களின் இறுதி நாள் அடையாள உண்ணாவிரத

கேணல் திலீபனின் நினைவாக கோட்ட ரீதியாக நடைபெறும் இறுதி நாள் அடையாள உண்ணாவிரத நிகழ்

க்க கூட்டத்திலும் அனைவரும் அணிதிரண்டு மக்கள்புரட்சி வெடிக்கட்டும் அதனால் சுதந்திர தமிழீழம் மலரட்

நாட்களின் இறுதி நாள் அடையாள உண்ணாவிரதமும், வீரவணக்கக் கூட்டமும் நாளை கோட்ட ரீதியாக நடைபெறவுள்ளன.

இது குறித்து யாழ் மாவட்ட மாவீரர் பணிமனைவிடுத்துள்ள செய்திக் குறிப்பில் தமிழ் மக்களின் விடிவிற்காய் தன் வயிற்றிலே பசிவளர்த்து இந்திய வல்லாதிக்கத்தின்முகத்திரையை கிழித்தெறிந்து காந்தியத்தின் பிறப்பிடத்திற்கு அகிம்சை என்றால் என்ன என்பதை போதித்து தியாக வேள்வியில் பன்னிரு நாட்கள் நீரெதுவுமின்றி உண்ணா நோன்பிருந்து பன்னிரண்டாவது நாள் 26. 9 87 அன்று ஈகச்சாவை தழுவிக் கொண்ட லெப். பெறும் இறுதி நாள் அடையாள உண்ணாவிரத நிகழ்வுகளிலும் நினைவு வீரவண ட்சி வெடிக்கட்டும் அதனால் சுதந்திர தமிழீழம் மலரட்

[6ஆம் பக்கம் பார்க்க]

# கோட்ட ரீதியாக கலை நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்[

தியாகி திலீபனின் 7ஆம் ஆண்டு நினைவு தினத்தில் நாளை கோட்ட ரீதியாக கலை நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

வலிகாமம் தீவகக் கோட்டத்தில் அஞ்சலி நடனம், வில்லிசை(ஸ்ரீதேவி குழுவினர்) தமிழீழ இசைக்குழுவின் இசை நிகழ்ச்சி என்பனவும், தென்மராட்சிக் கோட்டத்தில், வில்லுப்பாட்டு தியாக தீபம் (நாட்டிய நாடகம்), இசை நாடகம் என்பனவும், வடமராட்சிக் கோட்டத்தில், வில்லிசை,(சின்னமணி குழுவினர்) நாட்டிய நாடகம், சிறுவர் நிகழ்ச்சி என்பனவும் நடைபெறும்.

சேகர் (மாணிக்கப்போடி முருகமூர்த்தி, மட்டக்களப்பு) என்னும்போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## மீன்பிடிக்கு அனுமதி இல்லை

(கொழும்பு)

மன்னார் கடலில் இரவில் மீன்பிடிக்க அனுமதி வழங்கப்படமாட்டாதுஎனபாதுகாப்பு அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

# தேசிய நலனுக்காக ஒற்றுக் கேட்டல் பிழையான தொன்றல்ல

## ஜனாதிபதி செயலகம் அறிவிப்பு

தேசிய நலனை கருத்திற் கொண்டு மேற்கொள்ளப்படும் தொலைபேசி ஒற்றுக் கேட்டல் தவறானதல்ல என ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கை தெரிவித்துள்ளது

அரச நிறுவனங்களில் சட்ட விரோத தொலைபேசி ஒற்றுக்கேட்டல் நடைபெறுவதாக வெளியான குற்றச்சாட்டுகள் பற்றி ஜனாதிபதி செயலகம் அறிக்கை விடுத்தது வெளியான குற்றச்சாட்டுகள் பொய்யானது. தொலைபேசிகளுக்கான இடைமறிப்பு கருவி 1953இல் பொலிஸ் விசேட பிரிவில் அமைக்கப்பட்டதொன்றாகும் அன்று தொட்டு 1974 வரை பொலிஸ் விசேட பிரிவால் பதவியிலிருந்த அரசுகளின் பூரண அங்கீகாரத்துடன் இக் கருவி பயன்பட்டது. 1974 முதல் இன்றுவரை பொலிசின் புலனாய்வு சேவையாலும் பின்பு பாதுகாப்பு அமைச்சின் முந்திய புலனாய்வு பணியகத்தாலும் தொலைபேசி இடைமறிப்புகள் மேற்கொள்ளப்பட்டன

அவசரகால நிலைமையின் கீழ் தொலைபேசி ஒற்றுக்கேட்டலுக்கான அதிகாரம் ஜனாதிபதிக்குண்டு. இத்தகைய ஒற்றுகேட்டல் மூலம் பல இரகசிய தகவல்களும் பெறப்பட்டது என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ். மாவட்ட புனரமைப்பு குறித்து பூர்வாங்க அறிக்கை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

யாழ் மாவட்டபுனரமைப்பு வேலைத்திட்டங்கள் தொடர்பான பூர்வாங்க அறிக்கை ஒன்றை யாழ். அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் பிரதமர் சந்திரிகா குமாரதுங்கவிடம் கையளித்துள்ளார்.

யுத்தத்தினால் பாரியளவில் பாதிக்கப்பட்ட யாழ். மாவட்ட புனரமைப்பு வேலைத் திட்டங்களுக்கு ஆகக் குறைந்தது எண்ணூறு கோடி ரூபா வரை தேவைப்படும் என தனது அறிக்கையில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரதமரின் பணிப்பின்பேரில் அரசாங்க அதிபர் இவ் உத்தேச மதிப்பீட்டை தயாரித்து வழங்கியுள்ளார்எனவும் இத் திட்டங்கள் தொடர்பாக பிரதமர்அரசாங்கஅதிபருடன் நீண்ட நேரம் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## புனர்வாழ்வு நிதியில் 520கோடி ரூபாநிதி மோசடி விசாரிக்க ஆணைக்குழு

(கொழும்பு)

புனர்வாழ்வு வேலைக்கென புனர்நிர்மாண அமைச்சினால் செலவிடப்பட்ட 520 கோடி ரூபா செலவீனம் தொடர்பாக விசாரணை நடத்த ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படவுள்ளது.

1988 ஆம் ஆண்டு தொடக்கம் 1993 ஆம் ஆண்டு வரை ஐந்து வருட காலங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆவணங்கள் இன்றி இச் செலவீனம் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

இது குறித்து விசாரணை நடத்தவே ஆணைக்குழு நியமிக்கப்படும்எனபுனர் வாழ்வு புனர்நிர்மாண அமைச்சர்எம். எச். எம் அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

## விஜேகுமாரதுங்க, லலித்

# கொலை சந்தேகநபர்களை விடுவிக்க ஐ.தே.க- அமைச்சர்கள் முயற்சி

(கொழும்பு)

விஜேகுமாரதுங்க லலித் அத்துலத்முதலி என்போரின் கொலை தொடர்பாக கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள மூன்று இளைஞர்களை விடுவிக்க ஐ. தே க. அரசாங்கத்தின் பல அமைச்சர்கள் முயற்சி செய்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இக்கொலைகள்தொடர்பாக கைது செய்யப்பட்டு தடுப்புக்

(6ஆம் பக்கம் பார்க்க)

# தாயக மீட்புப் போரில் பெண் புலிகள் பெரும் பங்கு

(கொழும்பு)

களங்களில் முன்னணியில் நின்று போரிட்டு தமிழ் தாயகம் பெறுவதில் விடுதலைப் புலிகளின் பெண்போராளிகளின் பங்கு அதிகரித்து வருகின்றது. இதற்கு தற்கொலைப்படைத் தாக்குதலிலும் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறு, அண்மையில் யாழ்ப்பாணம் வந்து

[6ஆம் பக்கம் பார்க்க[

## அமைச்சர் வீரவன்னிக்கு பிணைகோரி மனு தாக்கல்

பிரதி அமைச்சர் சமரவீர வீரவன்னிக்கு பிணை வழங்குமாறு அவரின் மனைவி நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

நடந்து முடிந்த பொதுத் தேர்தல் காலத்தில் நடைபெற்ற வன்செயல் ஒன்றின் போது ஐ தே.க. ஆதரவாளர் ஒருவரைக் கொலை செய்தார் என்ற சந்தேகத்தின் பேரில் இவர் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

# ஏயர்பஸ் கொள்வனவு விசாரிக்க ஆணைக்குழு

(கொழும்பு)

ஏயர் லங்காவின் ஏயர்பஸ் கொள்வனவு பற்றி ஆராய தனிநபர் ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

பிரான்சிலிருந்தான இக் கொள்வனவு பற்றி ஆராய ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி ஒ- எஸ் எம். செனவிரத்ன நியமிக்கப்பட்டுள்ளார் ஆறு வாரங்களுக்குள் அறிக்கையொன்றை சமர்ப்பிக்க கோரப்பட்டுள்ளதாகவும்

(6ஆம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

**Yogi Home Science Academy**

கேக் ஐசிங், மார்சீனிமலர்கள் (Sugar Craft) மேலைத்தேய ஐசிங் (Fondant Icing) சமையற்கலை, ஒப்பனைக்கலையும், தலை அலங்காரமும் புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகி உள்ளன. சேர விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

71 B, நாயன்மார் வீதி, கச்சேரி நல்லூர் றோட் நல்லூர் (9499)

**ஆண்டு 4**

ஆண்டு 4 மாணவர்களுக்கு புலமைப்பரிசில்(1996) மாதிரி வினாத்தாள் (தமிழ், கணி, ஆங்கிலம்) 2-10-94 ஞாயிறு வெளியிடப்படும் தேவையானோர் தொடர்பு கொள்ளவும். புலமைப்பரிசில் மாதிரி வகுப்புகள் ஆரம்பமாகியுள்ளன. புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (9503)

**ஆனந்தம் சீயாக்காய்**

சிரசின் தனித்துவத்தை பேணுவதற்கு வேண்டிய மூலிகைகளுடன் சீயாக்காய் சேர்த்து சித்த மருத்துவ நிபுணர் ஆலோசனைப்படி தயாரிக்கப்பெற்றது ஆனந்தம் சீயாக்காய்ப் பவுடர் பேன் சொடுகு அழுக்கு முற்றாக அகற்றி சுகவாழ்வு தருகிறது கேட்டு வாங்குங்கள் ஆனந்தம் சீயாக்காய்ப்பவுடர். (சி-10288)

**விற்பனைக்கு**

முட்டையிட்டு கழித்த கோழிகள் மலிவு விலையில் விற்பனைக்குண்டு தொகையாக கொள்வனவு செய்தால் விசேட விலைக்கழிவு உண்டு தொடர்பு 698|15 தலையாழி வயிரவர் கோவிலடி சபாபதிவீதி, யாழ்ப்பாணம். (9507)

**தவறிவிட்டது**

நவாலி தெற்கைச் சேர்ந்த திருமதி சிவக்கொழுந்து அன்னம்மாவினுடைய தேசிய அடையாள அட்டை (இல 366550224 V) 20-09-94 அன்று மானிப்பாய் வங்கிக்கு

# சந்திரிகாபுர குடியேற்றத்தை நிறுத்த ஜனாதிபதிக்கு அஸ்வர் அவசரத்தந்தி

(கொழும்பு)

புத்தளத்திலும், அதனை அடுத்துள்ள பகுதிகளிலும் அரசாங்க ஊழியர்களின் வீடமைப்பு திட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட காணியில் அத்துமீறிய வகையில் சட்டவிரோத குடியேற்றம் இடம்பெற்று வருகிறது. இதனைத் தடுத்து நிறுத்த உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் ஏ எச். எம். அஸ்வர் ஜனாதிபதிடி பி. விஜேதுங்காவிற்கு அனுப்பி வைத்துள்ள அவசரத்தந்தி ஒன்றில் கேட்டுக்கொண்டுள்ளார்.

அத் தந்தியில் அவர் மேலும் குறிப்பிடுகையில், புத்தளத்திலும், அதனை அடுத்துள்ள பகுதிகளிலும் இருக்கும் அரசுக்கும், உள்ளூராட்சி மன்றங்களுக்கு, மாகாண சபைகளுக்கும் சொந்தமான எதிர்கால அபிவிருத்திக்கென நகர அபிவிருத்தி அதிகார சபையால் அங்கீகரிக்கப்பட்டுள்ள காணியில் பாரிய அளவில் நன்கு திட்டமிடப்பட்ட சட்ட விரோத ஆக்கிரமிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

நகரசபை எல்லைக்குள் இவ்வாறு ஆக்கிரமிக்கப்பட்ட நிலப்பகுதி சந்திரிகாபுர எனப் பெயரிடப்பட்டிருப்பதுடன் நீலக் கொடிகளாலும் பிரதமரின் படங்களாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளது. இந்த நிலப்பகுதி அரசாங்க ஊழியர்களுக்கானவீடமைப்பு திட்டம் ஒன்றிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டதாகும். இந்த அத்துமீறிய குடியேற்றம் தொடர்பாக அரசாங்க ஊழியர்கள் பலத்த எதிர்ப்பை தெரிவித்துள்ளனர். நிலைமை பதற்றமாக உள்ளது. நிலைமை மேலும் சீர்கேடு அடைய முன்பு இக்குடியேற்றத்தை நிறுத்த சட்ட அமுலாக்கல் அதிகாரிகளுக்கு மேலும் உத்தரவிட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

## கண் சிகிச்சை

தென்மராட்சிப் பகுதியில் கண்பார்வை குறைந்தோருக்கான கண்வெண்விழிப்படல சத்திர சிகிச்சை (கற்றாக் ஒப்றேசன்) ஒன்று இன்று சாவகச்சேரி அரசினர் வைத்திய சாலையில் மேலும் 25பேருக்கு இடம் பெறவுள்ளது.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் இச் சிகிச்சையினால் முன்னரும் பலர் நன்மை பெற்றுள்ளதை கருத்தில் கொண்டே மேற்படி சிகிச்சை 3வது பிரிவில் மேலும் 25 பேருக்கு வழங்கப்படவுள்ளது இச் சிகிச்சை குழுவினர் அண்மையில் வடமராட்சி மக்களுக்கும் சேவை செய்யும் நோக்குடன் மந்திகை மருத்துவமனையிலும் ஒரு தொகுதியினருக்கு கண் பரிசோதனையிட்டு சிகிச்சை நடத்தியது குறிப்பிடத்தக்கது இவ் லயன்ஸ் கழகத்தின் சேவையை மக்கள் பெரிதும் பாராட்டி வருகின்றனர்.

# புதிய பயிர்வகைகள் விவசாயிகளுக்கு அறிமுகம்

### த. பொ. மே. நி. திட்டம்

(யாழ்ப்பாணம்)

ஏற்றுமதிச் சேற்றதும், வருமானம் தரக்கூடியதும் எமது தேவைகளை நிறைவு செய்யக் கூடியதுமான பயிர்வகைகளை விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்துவது என்று தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தீர்மானித்துள்ளது. தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன ஏற்பாட்டில் திருநெல்வேலி ஆராய்ச்சி நிலைய மண்டபத்தில் நடைபெற்ற ஒரு கலந்துரையாடலில் இத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

விவசாய ஆராய்ச்சிப் பகுதியின் பிரதிப் பணிப்பாளர் விவேகானந்தன் தலைமையில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில், எதிர்கால விவசாய ஆராய்ச்சி, மண் ஆராய்ச்சி இதுவரை ஆராய்ச்சி செய்த பயிர்களுக்கான முன்னோடி நடவடிக்கைகள், கோப்பாய் உவர் நிலச் செய்கை, விரிவாக்கம், தூய விதை உற்பத்தி மற்றும் விவசாய ஒருங்கிணைப்பு ஆகிய விடயங்கள் பற்றியும் திட்டமிடப்பட்டது.

# அரசாங்கம் மாறுவதால் மாறுபவன் நான் அல்ல

### தொண்டமான் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் மாறுவதால் மாறுபவன் நான் அல்ல. நான் மலையக மக்களின் சேவகன், அவர்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் நியாயம் வழங்கப்பட வேண்டும் அவர்களின் நீதிக்கும், நியாயத்திற்குமாகவே நான் செயற்படுகிறேன், இவ்வாறு இ.தொ.காவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.தொண்டமான் தெரிவித்தார்.

முன்னாள் சபாநாயகர் எம்.எச்.முகம்மது பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படுவதைப் பாராட்டும் முகமாக கொழும்பு பழைய நகர மண்டபத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய தொண்டமான் மேலும் கூறுகையில், நான் 55 வருடங்களாக இதொ காவின் தலைவராக தொடர்ந்து இருந்து வருகிறேன். அரசாங்கம் மாறுவதால் மாறுபவன் அல்ல நான் ஆனால் எனது மக்களின் நீதிக்கும் நியாயத்திற்குமாக வேலை செய்பவன். தொடர்ந்து எவரும் வெல்ல முடியாது தொடர்ந்து எவரும் தோற்கவும் முடியாது நாம் எதற்கும் தயார் எனவும் தெரிவித்தார்.

## 142-ம் நாள் கண்ணீர் அஞ்சலி



தமிழீழ சொத்தாய்: 1974-02-22

தமிழீழ வித்தாய்: 1994-05-05

**கப்டன் தேவன் இளங்குமணன்**

**(பாலசிங்கம் ஜெயபாலன் (ரகு))**

பகைவரின் இராட்சியத்தை அழிக்க வந்த - எம் ரகுவே
இளங்குமணன் என்னும் பெயர் தாங்கி - எதிரி முன்
வீர நடை போட்ட தேவனே
மணலாறு எதிரியின் களத்தில் போரிட்டாய்
உன் விருப்பம் தான் என்ன
தமிழருக்கென தமிழீழம்தானே வென்றெடுப்போமடா!
நிச்சயம் தாயகம் பிறக்கும் தாகம் தீரும்.

இவருடன் வீரச்சாவை தழுவிய மற்றைய இரு போராளிகளுக்கும் எமது இதய அஞ்சலிகள்

25-9-1994 (இன்று) இவரது இல்லத்திற்கு மதிய போசனத்திற்கு வருகை தரும்படி அனைத்து போராளிகளையும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கிறோம்.

உரும்பராய் தெற்கு உரும்பராய்.

உன்பிரிவால் வாடும்
அம்மா, அப்பா, அக்கா
அத்தான், அண்ணா, தம்பி
(9511)

## நினைவு கூருகின்றோம்...

**25. 09 1994.**

1989-ம் ஆண்டு இதே தினத்தில் கோடாலிக்கல் பகுதியில் இந்தியப்படையினரின் மிதிவெடியில் சிக்கியதில் வீரச்சாவெய்திய,

**ஜஸ்ரின்** (ஆறுமுகம் புலேந்திரன் - 2ம் வட்டாரம், முள்ளியவளை - முல்லைத்தீவு)

இதே தினத்தில் வீரச்சாவெய்திய,

**காண்டீபன்** (- - - -)

1990 ம்- ஆண்டு வவுனியா - பாவற்குளம், 1ம் படிவம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய,

**கோபிநாத்** (வேலாயுதம் ரவி-வாரிக்குட்டியூர், பாவற்குளம் - வவுனியா)

**பரதன் - வரதன்** (கந்தசாமி உதயசங்கர் -சேமமடுக்குளம், சேமமடு - வவுனியா)

**தவக்குமார்** (சிவசுப்பிரமணியம் ஜனார்த்தனன் - ஏழாலை கிழக்கு -யாழ்)

1991- ம் ஆண்டு மணலாற்று சமரில் விழுப்புண்ணடைந்து சிகிச்சை பெற்று வரும் போது வீரச்சாவெய்திய,

**சீலன் - குணசீலன்** (இராசு சிறிக்குமார் - கனகராயன்குளம் - வவுனியா)

மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**சின்னமருது** (தேவராசா சிவகுமார் - யோகபுரம், உரும்பராய் கிழக்கு -யாழ்)

திருமலை - முதலிக்குளம் பகுதியில் சிறிலங்கா விமானப்படைத்தளத்தில் விமானப்படையினர் மீதுபதுங்கியிருந்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**மேஜர்ஜீவா - அன்சார்** (சின்னத்தம்பி தியாகராசா - கந்தளாய் - திருமலை)

1992-ம் ஆண்டு மட்டு இடைக்காடுப் பகுதியில் சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொண்ட போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய,

**இந்துஜன் - றேமியோ** (தவராசா உதயகுமார் - -சிறியபுல்லுமலை மட்டு)

மன்னார் மாவட்ட பூநகரியிலுள்ள பள்ளிக்குடா என்னுமிடத்தில் அமைந்திருந்த சிறிலங்கா இராணுவ மினிமுகாம்களையும், 62 தொடர் காவலரண்களையும் தாக்கியழித்தபோது வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். சுருளி** (நவரட்ணம் ரவி மூதூர் -திருமலை)

மன்னார் மாவட்டத் தளபதியான,

**லெப். கேணல் சுபன்** (விநாசித்தம்பி சுந்தரலிங்கம் - இலுப்பைக்கடவை மன்னார்)

**லெப். அறிவுடையான்** (செல்லையா உதயகுமார் பூநகரி - மன்னார்)

**2-ம்லெப். பன்னீர்ச்செல்வன்** (சந்தியாப்பிள்ளை அல்போன்ஸ் டானியல் - தலைமன்னார்)

**நெடியரசன்** (இராமப்பிள்ளை மகாலிங்கம் -ஞானிமடம் பூநகரி -மன்னார்)

**லெப். இயல்வாணன் - சுமன்** (முருகேசு வரதராஜன் - தென்னியங்குளம் - துணுக்காய்)

**லெப். தமிழேஸ்வரன்** (கார்த்திகேசு யோகேஸ்வரன் - கரவெட்டி - யாழ்)

1993-ம் ஆண்டு மட்டு கட்டுவன்வில்லில் பகுதியில் அமைந்திருந்த சிறிலங்கா பொலிஸ் முகாம் மீது

அருகாமையில் தவறவிடப்பட்டுள்ளது கண்டெடுத்தவர்கள் மானிப்பாய் இலங்கை வங்கியில் ஒப்படைக்கவும்.

(9509)

## தவறி விட்டது

22-9-1994 அரியாலை தபால் கட்டை சந்தியடியில் கிருஷ்ணபிள்ளை தங்கமலர் என்பவருடைய அடையாள அட்டை (இல 58593215 V) தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (சி-10410)

## திருக்குறள் மனனப்போட்டி முடிவுகள்

யாழ். நகரில் கல்விபயிலும் காரைமாணவர்களின் மனதில் திருக்குறளை பதிக்கும் நோக்குடன் வாரிவளவு நல்லியக்கச் சபையினால் நடாத்தப்பட்ட திருக்குறள் மனனப் போட்டி கடந்த ஞாயிறு அன்று யாழ். நாவலர் மகா வித்தியாலயத்தில் காரை கவிஞர் எம். பி. அருளானந்தம் ஆசிரியர் தலைமையில் நடைபெற்றது.

மேற்படி போட்டி நிகழ்வில் மொத்தம் 104 மாணவர்கள் பங்கு கொண்டனர். இந்தப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்ட மாணவர்கள் விபரம்:- க. பிரணவரூபன் ஆண்டு 5 யாழ் இந்து ஆரம்ப பாடசாலை, செ. சிவசங்கரி ஆண்டு4 வலந்தலை தெற்கு அ. மி. த. க. பாடசாலை, க. கஜவதனி ஆண்டு3 யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை, த. சிவரூபி ஆண்டு 2 வலந்தலை தெற்கு அ. மி. த. க. பாடசாலை, ந. ஆனந்தராசா ஆண்டு 1 வலந்தலை தெற்கு அ. மி. த. க. பாடசாலை, ஸ்ரீ அமிர்தவர்ஷினி பாலர் வகுப்பு யாழ். நாவலர் பாலர் சோலை [41]

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

## தென்மராட்சிக் கோட்டம்



# தியாக தீபம் திலீபன்

# 7ஆம் ஆண்டு நினைவு நாள் அஞ்சலி

எண்ணத்துக் கெட்டாத எழுதீபம்-திலீபன்
விண்ணுக்குள் உறைகின்ற விடி வெள்ளி
கண்ணுக்குள் அமைகின்ற மணிபோல-நிலைக்
கண்ணாடி தமிழீழ மண்ணுக்கவன்

நன்றே ஒரு வேள்வி தொடக்கிவைத்த நாயகனே!
நற்றவத்தோர் போற்ற நமதிளஞ் சந்ததிகள்
உற்றே உணரவைத்து ஆண்டாண்டு விழா வெடுத்து
பொற்றேர் புனைந்துன் புகழுடலைப் போற்றிடுவோம்

உயிரிலும் மேலாகத் தமிழ்மண்ணை நேசித்தாய்
உரிமைக்கு உணர்வோடு களஞ்சென்று போரிட்டாய்
உயிரற்ற உடலையும் தமிழர்க்கு நீயீந்தாய்
உயர்கல்விக் கழகத்தில் நிலையாக வைப்பதற்கு

26-9-94 அன்று தென்மராட்சிக் கோட்டச் சகல தனியார் கல்வி நிறுவனங்களையும் பிரத்தியேக வகுப்புகளையும் மூடி தியாகி திலீபனின் இறுதி நாள் நினைவு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும்படி வேண்டுகிறோம்.

தலைவர்,
தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்,
தென்மராட்சி.

(9510)

1993 -ம் ஆண்டு மட்டு ... யில் அமைந்திருந்த சிறிலங்கா பொலிஸ் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**மேஜர் நாகேஸ்வரன் - சங்கர்** (சந்திரசேகர் ஜெயசங்கர் - கல்லடி - மட்டு)

**மேஜர் கருணாநிதி - சார்லி** (பாண்டியன் பத்மநாதன் - திருக்கோயில் - அம்பாறை)

**லெப். சத்தியவாணன் - கடாபி** (வீராகமுத்து பரமேஸ்வரன் -காக்கையன்தீவு -கன்னங்குடா - மட்டு)

**கமலாயம்** (கதிர்காமநாதன் கோவிந்தராஜா -களுவாஞ்சிக்குடி - மட்டு]

மட்டு - மகிழவெட்டுவான், கற்குடாப்பகுதியிற் சிறிலங்கா இராணுவத்தினரும் ரெலோவினரும் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**2ம் லெப். கவிதரன் நல்லவன்** (இளையதம்பி நல்லரெத்தினம் - செங்கலடி - மட்டு)

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

**சிவம்** (பன்குடாவெளி -மட்டு)

இதே தினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும், கடற்பரப்பிலும் சிறிலங்கா, இந்தியப் படையினராலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொது மக்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி- 10 404)


## கேட்டு வாங்குங்கள்

**மணலாறு கச்சான் அலுவா**

தரம், சுவை, சுத்தம் நிறைந்தது. எல்லா வியாபாரிகளிடமும் பெற்றுக்கொள்ளலாம். இப்போது விசேட பரிசுத்திட்டத்துடன் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது.

பாரதி சிறுகைத்தொழில் நிலையம்
சம்பியன் லேன்,
கொக்குவில்.
(9505)

நூலகம் யாழ்ப்பாணம் நல்லூர்

### யாழ் றோட்டரக்ற் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

# யாழ். பல்கலைக்கழக அணி சம்பியன் பட்டத்தை வென்றது

யாழ்ப்பாணம் றோட்டரக்ற் கழகம் எஸ். எம். பெர்னாண்டோ நிறுவன ஆதரவில் நடாத்திய உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் யாழ் மாவட்டத்தின் முன்னணிக் கழகங்கள் 14 அழைக்கப்பட்டன. இச்சுற்றுப்போட்டியில் இரண்டு கட்டங்களாகப் போட்டிகள் நடைபெற்றன. முதல் கட்டத்தில் கழகங்கள் நான்காக பிரிக்கப்பட்டு போட்டிகள் விலகல் முறையிலும் 70 நிமிடங்களைக் கொண்டதாகவும் அமைந்திருந்தன. இதில் வெற்றி பெற்ற கழகங்கள் இரண்டாம் கட்டத்தில் சுற்றுமுறையில் 90 நிமிடங்கள் கொண்ட போட்டிகளில் பங்குபற்றின. சுற்றுமுறையில் வெற்றி பெறின் 2 புள்ளிகளும் சமனாயின் தலா 1 புள்ளியும் வழங்கப்படும்.

**விலகல் முறையில் ஆட்டம்**

நான்கு பிரிவில் முதல் பிரிவில் சென். அன்ரனீஸ், யங்றோயல், ஸ்கந்தா விளையாட்டுக் கழகங்களும் இரண்டாம் பிரிவில் சென்.மேரீஸ் பொற்பதி, யங்கென்றீஸ், மாவத்தை விளையாட்டுக் கழகங்களும் மூன்றாம் பிரிவில் ஞானமுருகன், விநாயகர் அரியாலை, அராலி அண்ணா விளையாட்டுக் கழகங்களும் நான்காம் பிரிவில் சென் நீக்கிளஸ், றோயல், பல்கலைக்கழகம் ஆகிய விளையாட்டுக் கழகங்களும் இடம்பெற்றன.

முதலில் பொற்பதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென்மேரீஸ் விளையாட்டுக் கழகம் மோதியது இதில் பொற்பதி 1-0 என்ற ரீதியில் வெற்றி பெற்றது. அடுத்து யங்கென்றீஸ் 7-0 என்ற கோல்கணக்கில் மாவத்தை விளையாட்டுக் கழகத்தை தோற்கடித்தது. விநாயகரை எதிர்த்து அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் மோதிய மற்றொரு போட்டியில் விநாயகர் 4-1 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது. ஸ்கந்தா விளையாட்டுக் கழகத்திற்கும் யங்றோயலுக்கும் நடைபெறவிருந்த போட்டியில் யங்றோயல் அணியின் தாமதத்தால்ஸ்கந்தாவெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. மற்றொரு பிரிவுப்போட்டியில் சென்நீக்கிளஸ்விளையாட்டுக் கழகத்திற்கும் றோயல் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் விறு விறுப்பாக நடைபெற்ற போட்டியில் சென் நீக்கிளஸ் தனது சந்தர்ப்பத்தை சாதகமாக்கி 1-0 என்ற கோல் கணக்கில் வென்றது.

அடுத்து சென் அன்ரனீஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் ஸ்கந்தாவுக்கும் நடைபெற்ற போட்டியில் அன்ரனீஸ் 4-0 என்ற கோல்கணக்கில் வெற்றியை தனதாக்கிக் கொண்டது யங்கென்றீஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் பொற்பதி விளையாட்டுக் கழகத்திற்கும் நடைபெற்ற மற்றுமோர் விறுவிறுப்பான போட்டியில் 1-0 என்ற கோல்கணக்கில் யங்கென்றீஸ் வெற்றி பெற்றது. பல்கலைக்கழக அணிக்கும் சென் நிக்கிளஸ் அணிக்கும் இடையில்நடைபெற்ற போட்டியில் சென்நீக்கிளஸ் ஒரு கோலைப் போட்டு முன்னணியில் நின்ற போதும் இறுதி நேரத்தில் பல்கலைக் கழக அணி பெற்ற ஒரு கோல் மூலம் சமமாகியது. இதில் பெனால்டி உதை மூலம் 6-5 என்ற கோல்கணக்கில் பல்கலைக்கழக அணி வென்றது அடுத்து ஞானமுருகன் அணிக்கும் அராலி அண்ணா அணிக்கும் நடைபெற இருந்த போட்டியில் ஞானமுருகன் சமுகம் தராதமையால் அராலி அண்ணா வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது விலகல் முறை போட்டியில் இறுதியில் அராலி அண்ணாவுக்கும் விநாயகர் அணிக்கும் போட்டி நடைபெற்றது இதில் 3-3 என்ற சமநிலையில் பெனால்டி உதை மூலம் விநாயகர் வென்ற போதும் போட்டியில் 7 வீரர்கள் உதைபந்தாட்டக் காலணிகள் அணிய வேண்டிய நிபந்தனையை மீறியமையால் அராலி அண்ணாவே வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது முதல் கட்டப்போட்டியின் முடிவின்படி சென். அன்ரனீஸ், யங்கென்றீஸ், பல்கலைக்கழக அணி அராலி அண்ணா அணி ஆகியன இரண்டாம் கட்டத்திற்கு தகுதி பெற்றன.

**2 ஆவது கட்டம் லீக் முறையில்**

இரண்டாம் கட்டப் போட்டியில் முதலில் யங்கென்றீஸ் அணியை எதிர்த்து யாழ் பல்கலைக்கழக அணி மோதியது. இப்போட்டியில் யங்கென்றீஸ் முதல் பாதியில் 1 கோலை போட்டது. இக்கோலை டொமினிக் பெற்றுக் கொடுத்தார். இருந்த போதும் 80 ஆவது நிமிடத்தில் பல்கலைக் கழகத்தின் அணித்தலைவர் கென்றீசன் நிலான் அடுத்தடுத்து இரண்டு கோல்களை போட்டு 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றியை தமதணிக்காக்கினார் இப்போட்டியில் அ.ம டொமினிக் சிறந்த வீரராக தெரிவு செய்யப்பட்டார்.

யாழ் பல்கலைக் கழக அணிக்கும் சென். அன்ரனீஸ் அணிக்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் பல்கலைக் கழக அணி முதல் பகுதியிலேயே இரண்டு கோல்களைப் பெற்றது. எ. தயாபரன் ஒரு கோலையும் அ. அன்ரன் சிசில் ஒரு கோலையும் பெற்றுக் கொடுத்தனர். சென். அன்ரனீஸ் தொடர்ந்துகோல் போட எத்தனித்த போதும் பல்கலைக்கழக தடுப்பு வீரர்களினால் முறியடிக்கப்பட்டது. இறுதியில் 2-0 என்ற கோல் கணக்கில் பல்கலைக் கழக அணி வென்றது. இப்போட்டியில் சிறந்த வீரராக அ அன்டன் சிசில் தெரிவானார்.

யங்கென்றீஸ் அணிக்கும் அராலி அண்ணா அணிக்கும் இடையில்நடைபெற்ற போட்டியில் ஒரு கட்டத்தில் 2-0 என்ற நிலையில் பின்தங்கியிருந்த அராலி அண்ணா அணியை ந. யோகேந்திரம் 2-2 என்ற நிலைக்கு கொண்டுவந்த போதிலும் யங்கென்றீஸ் இறுதியில் 3-2 என்ற கோல் கணக்கில் வென்றது. இப்போட்டியில் அராலிஅண்ணாவின் ந.யோகேந்திரம் சிறந்த ஆட்டக்காரரானார்.

மற்றொரு போட்டியில் பல்கலைக் கழக அணி அராலி அண்ணா அணியை 2-0 என்ற கோல் கணக்கில் வென்றது. இதில் பல்கலைக்கழகத்தின் கென்றீசன் நிலான் 2 கோல்களையும் போட்டார். இப்போட்டியில் கென்றீசன் நிலான் சிறந்த வீரராகத் தெரிவு செய்யப்பட்டார்.

சென். அன்ரனீஸ் அணிக்கும் யங்கென்றீஸ் அணிக்கும் இடையில் நடைபெற்ற விறுவிறுப்பானபோட்டியில் சென் அன்ரனீஸ் முதல் பாதியில் ஒரு கோலைப் போட்டது. இக்கோலை செபநசன் பெற்றுக் கொடுத்தார் ஆனாலும் யங்கென்றீஸ் பலமாக எதிர்த்து விளையாடி பல சந்தர்ப்பங்களை நழுவ விட்ட போதும் 85-வது நிமிடத்தில் யங்கென்றீஸ் வீரர் எமில்றாபன் ஒரு கோலை போட்டுசமமாக்கினார் இறுதியில் 1-1 என்ற கோல் கணக்கில் வெற்றி தோல்வியின்றி ஆட்டம் முடிவு பெற்றது இப்போட்டியில் சிறந்த வீரராக மு. எமில்றாபன் தெரிவு செய்யப்பட்டார்.

சென். அன்ரனீஸ் அணிக்கும் அராலி அண்ணா அணிக்கும் இடையில்நடைபெற்ற போட்டியில் சென். அன்ரனீஸ் 2-0 என்ற கோல் கணக்கில்வென்றது இப்போட்டியில் சிறந்த வீரராக சூ. றோய் தெரிவு செய்யப்பட்டார்.

**இரண்டாம் கட்டப் போட்டியின் அடிப்படையில்;**

பல்கலைக்கழக அணி 6 புள்ளிகளையும். சென் அன்ரனீஸ் யங்கென்றீஸ் தலா 3 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. இதன் மூலம் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் யாழ் பல்கலைக்கழக அணி சம்பியன் ஆனது இரண்டாம் இடத்தை பாசையூர் சென் அன்ரனீஸ் விளையாட்டுக்கழகமும், இளவாலை யங்கென்றீஸ் விளையாட்டுக் கழகமும் பெற்றுக் கொண்டன. இச் சுற்றுப்போட்டியின் இரண்டாம் கட்ட போட்டிகளில் சிறந்த ஆட்டத் தொடர் நாயகனாக ச. எ. கென்றிசன் நிலான் பல்கலைக்கழக அணித் தலைவர் தெரிவு செய்யப்பட்டார். இவர் 4 கோல்களை தனது அணிக்காக பெற்றுக் கொடுத்தார்

ரி. தேவதாஸ்

## விளையாட்டு அரங்கு

# காந்தரூபன் அறிவுச் சோலை அணி

## 3-0 என்ற ரீதியில் வென்றது

கடந்த 16.9 94 அன்றுவெகு விறுவிறுப்பான உதைபந்தாட்டப் போட்டி யொன்று காந்தரூபன் அறிவுச் சோலை மைதானத்தில் நடை பெற்றது. இப்போட்டியில் பங்குகொண்டோர் கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய மாணவர்களும், காந்தரூபன் அறிவுச் சோலை மாணவர்களும் ஆவர். இவர்கள் 15 வயதிற்குட்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

போட்டி ஆரம்பமாகும் முன் நடைபெற்ற வீரர்கள் அறிமுக வைபவத்தில் வடகிழக்கு மாகாணவிளையாட்டு அமைச்சின் உதவிப் பணிப்பாளர் திரு. ரீ. எஸ் குணரத்தினம், காந்தரூபன் அறிவுச்சோலைப் பொறுப்பாளர் திரு. ரமேஸ்அப்பா, கனகரட்ணம் ம. வித்தியாலய முன்னாள் அதிபர் திரு. கே. வி. தனேஸ்வரன், யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு இணைப்பாளர் திரு. தேவண்ணா ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆட்டம் 15 வயதிற்குட்பட்டோரினது என்றாலும் இரு அணியினரும் பெரிதும் அனுபவப்பட்டோர் போலவே தீவிரமாக ஆடியது ரசிகர்களுக்குப் பெருவிருந்தாக அமைந்தது. இரு அணியினரும் ஆரம்பத்தில், எவ்வளவோ முனைந்தும் எதிர்த் தரப்பு அரண்களை உடைத்து கோல் எதையும் போட்டு விட இயலவில்லை இருந்தும் இடைவேளைக்கு இரண்டு நிமிடங்கள் இருக்கையில், அறிவுச்சோலை அணித்தலைவர் சிறீவரதன் கோல் கம்பங்களுக்கு முன்னால் 10 அடி தூரத்தில் அடித்த அபாரமான அடி கோல் கம்பத்தில் பட்டு உள்நுழைந்தது. இதன் பின் ஆட்டம் மிக விறுவிறுப்பான கட்டத்தை அடைந்தது. இருதரப்பினரும் எப்படியாவது கோல் போடும் முகமாக படு தீவிரமாக ஆட ஆரம்பித்தனர்.

துரதிர்ஷ்டவசமாக அறிவுச் சோலை அணியினர் பெற்ற பெனால்டி உதையொன்றை சிறிவரதன் கோல்கம்பத்துக்கு மேலால் அடித்து அருமையானதொரு சந்தர்ப்பத்தைத் தவறவிட்டார்.

இதன் பின் சிறிது வேளையில் சிறிவரதன் நீண்ட தூரத்தில் இருந்து வேகமாக அடிக்க, பந்து நேராக கோல் காப்பு வீரனையும் மீறி கோலாக மாறியது. இதேவேளை கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய அணியும் விட்டுக்கொடுப்பதாக இல்லை. அணித்தலைவர் ஞானசேகரன் லாவகமாகப் பந்தைப் பல தடவை கொண்டுவந்து கோல் போடமுனைந்தார் இறுதியில் நிச்சயமான ஒரு உதையைத்கொடுத்த போது அறிவுச்சோலை கோல்காப்பு வீரர் திறமையாகத்தடுத்து அதன் பலனை பரஞ்சோதி வித்தியாலயத்திற்கு மறுத்துவிட்டார். ஆனால் மறுவளமாக போட்டி முடிவடைய 3 நிமிடங்கள் இருக்கும்போது அறிவுச்சோலை வீரர் ஜெயந்தன் ஒரு கோலைப் போடவே ஆட்டமுடிவில் 3-0 என்றவாறு அறிவுச்சோலை வெற்றிக் கனியைப் பெற்றுக் கொண்டது.

சிறப்பானதொரு ஆட்டத்தின் பின் ஏற்பட்ட உணர்வலைகள் பலப்பல இதில் சுட்டிக் காட்டப்பட வேண்டியது எவ்வகையிலும் அறிவுச்சோலை மாணவர்களின் முதலாவது உதைபந்தாட்டப் போட்டி இதுவென்பதுவாகும். இவர்கள் இன்னும் அனுபவம் பெற மேலும் மெருகேறுவர் என்பது ரசிகர்களின் கருத்தாக இருந்தது. அதேபோல பரஞ்சோதி வித்தியாலய மாணவர்களும் திறமை கொண்ட அணியாக இறுதி வரை நன்கு விளையாடினார்கள் உண்மையில் இவ்வாட்டம் இன்னும் சிறிது நேரம் நீடித்திருக்கக் கூடாதா என்ற அங்கலாய்ப்புதான் எல்லோரிடமும் காணப்பட்டது.

இப்போட்டியின் பிரதம நடுவராக நல்லூர் விளையாட்டு அபிவிருத்திக்குழு இணைப்பாளர் எஸ். நாகேந்திரம் கடமையாற்றினார்.

தாமதத்தால்ஸ்கந்தாவெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட் | ண்டாம் கட்டத்திற்கு தகுதி பெற்றன. | இதில் பலகலைக்கழகத்தின் கென்றிசன் நிலான் 2 கோல் | ரி. தேவதாஸ் | யும் போட்டு விட இயலவில் | அறிவுச்சோலை லோல்காப்பு | கடமையாற்றினார்.

## சிங்கர் கிண்ண உலக கிரிக்கெட் போட்டி

# சிறிலங்காவிற்கு ஆரம்பத்தில் கைகொடுத்த அதிர்ஷ்டம் இறுதியில் கைகொடுக்கத் தவறியது


அண்மையில் நடைபெற்று முடிவடைந்த சிங்கர் கிண்ணத்துக்கான நான்குநாடுகள் கலந்து கொண்ட மட்டுப் படுத்தப்பட்ட 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி சிறிலங்காவில் நடைபெற்ற முதலாவது சர்வ தேச ரீதியிலான கிரிக்கெட் போட்டியாகும். இந்தியா, பாகிஸ்தான், அவுஸ்ரேலியா சிறிலங்கா ஆகிய நாடுகள் இச் சுற்றுப்போட்டியில் கலந்து கொண்டன.

சிங்கர் நிறுவனம் இச் சுற்றுப்போட்டியை வெகு சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத் தக்கது. விளம்பரங்கள் என்றாலென்ன பரிசுத் தொகைகள் என்றால் என்ன எல்லா வகையிலும் சர்வதேசத் தரத்திலேயே நடாத்தினார்கள். இருந்தும் கூட காலநிலை பூரண ஒத்துழைப்பினைக் கொடுக்காமையால் ரசிகர்கள் சிறிது ஏமாற்றம் அடைய வேண்டியேற்பட்டது என்பதும் உண்மையே.

சிங்கர் கிண்ணச் சுற்றுப் போட்டி லீக் முறையில் நடைபெற்ற தொன்றாகும். இதில் ஒவ்வொரு நாடும் ஏனையவற்றை ஒருமுறை சந்தித்தன. இந்த வகையில் சிறிலங்கா தான் ஆடிய மூன்று ஆட்டங்களிலும் வெற்றி கண்டது. இந்தியா அவுஸ்ரேலியாவைத் தோற்கடித்தது, சிறிலங்காவிடம் தோல்வி கண்டது. பாகிஸ்தானுடனான ஆட்டம் நடைபெறவில்லை. அவுஸ்திரேலியா பாகிஸ்தானை வெற்றி கண்டாலும் சிறிலங்கா இந்திய அணிகளிடம் தோல்வி கண்டது. பாகிஸ்தான் தான் ஆடிய இரண்டு ஆட்டங்களிலும் தோல்வி கண்டது. இந்தியாவுடனான ஆட்டம் காலநிலை சீரின்மையால் நடைபெறவில்லை. இவ்வகையில் மூன்று ஆட்டங்களிலும் வெற்றி கண்ட சிறிலங்கா அணியும், அதனை அடுத்து ஒரு வெற்றி என்ற வகையிலும், எண்ணிக்கைச் சராசரி என்ற வகையிலும், முன்னணியில் நின்ற இந்தியாவும் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றன.

முதல் சுற்று ஆட்டத்தில் சிறிலங்கா பெற்ற மூன்று வெற்றிகளும் அவர்களது மனோநிலையில் பெரும் தைரியத்தைக் கொடுத்திருக்கும். ஏனெனில் இச் சுற்றுப் போட்டிக்குச் சில தினங்களுக்கு முன்னர் தான் பாகிஸ்தான் அணியுடனான ஒரு நாள் தொடரில் 4 - 1 என்றவாறு தோல்விகண்டிருந்தார்கள் இவர்கள் இச் சுற்றுப் போட்டியில் அவுஸ்திரேலியாவையும், பாகிஸ்தானையும் வென்றமை சிறப்புக்குரியனவாகும். இந்தியாவுடனான ஆட்டம் 25 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டதால் இரண்டு அணிகளதும் பூரண திறமை வெளிப்பட்டது என்று கொள்ள முடியாது. சிறிலங்கா அணி வீரர்களில் அணித் தலைவர் ரணதுங்க, ஹசான் திலகரட்ண போன்றோர் இச் சுற்றுப்போட்டியில் திறமையாகவே செய்தனர். சிறிது விமர்சனத்திற் குட்பட்டிருந்த அர்ஜுனா ரணதுங்க தனது திறமையை இங்கு நிருபித்துள்ளார் மொத்தத்தில்ஏனைய அணிவீரர்கள் கூட சிறிலங்காவின் விளையாட்டுப் பாணியை புகழ்ந்துள்ளனர்.

இந்தியாவைப் பொறுத்த வரை பலரும் மிகத்திறமையானவர்கள். ஒரு நாள்போட்டிகளில் சிறப்புறச் செய்தவர்கள் இவர்கள் அவுஸ்ரேலியாவிற்கு எதிரான ஆட்டத்தில் அற்புதமாக ஆடி வெற்றி கண்டார்கள். இங்கு குறிப்பிடத்தக்கது சச்சின் தனது முதலாவது சதத்தைப் பெற்றுக் கொண்டதாகும். மேலும் ஓட்டவேகச் சராசரியில் அவர்களைப் பாதுகாப்பான நிலைக்குக் கொண்டு சென்றதும் இந்த ஆட்டமாகும். அதற்குக் காரணம் சச்சினின் சதமாகும் அவுஸ்திரேலியா இந்தியாவுடன் ஆரம்பத்தில் நன்றாக துடுப்பெடுத்தாடினாலும்இந்திய சுழல்பந்துவீச்சாளர் ராஜேஷ் சௌகான் பின்னர் வேகப் பந்து வீச்சாளர் மனோஜ் பிரபாகர் இருவரும் அவுஸ்திரேலியா நினைத்துப்பார்க்க இயலாத அளவில் அவர்களை வீழ்த்தினார்கள். உண்மையில் இந்த நான்கு நாடுகளிலும் திறமையில் விஞ்சிநின்ற நாடு இந்தியா என்பதை மறுப்பதற்கில்லை.



மறுவளமாக இச் சுற்றுப் போட்டியில் பெரும் ஏமாற்றம் தந்த அணி பாகிஸ்தான் என்பதையும் குறிப்பிடவேண்டும். இவர்களது அணிக்கு அறிமுகம் தேவையில்லை. சிறிலங்காவிலேயே இரண்டு மாதங்கள் நிற்பவர்கள்- இவர்கள் இறுதிப் போட்டிக்கு வரக்கூடும் என்றும் எதிர்பார்க்கப்பட்டவர்கள். இந்நிலையில் இவர்களது தோல்வி அதிர்ச்சிகரமானதாகும். இதே வேளை அவுஸ்திரேலியாவும் சிறிலங்காவும் தம் திறமையைக் காட்டி பாகிஸ்தானை மடக்கினர்.

அவுஸ்திரேலியா முதலாவது ஆட்டத்தில் பாகிஸ்தானை வென்றாலும்கூட அடுத்த இரண்டு ஆட்டங்களிலும் தோல்வியே கண்டது. அலன் போடர், டீன்ஜோன்ஸ் போன்றோர் இருந்திருந்தால் அவுஸ்திரேலியா இவ்வளவு பலவீனப்பட்டிருக்குமா என்றொரு வினா எழுவது தவிர்க்கமுடியாததே. இவ்விருவரும் தாமாக ஒதுங்கவில்லை ஒதுக்கப்பட்டவர்கள் என்ற ரீதியிலேயே இவ்வினா எழுகின்றது இவர்களது அடுத்த பிரச்சினை 'ஆஷஸ்' தொடரில் இங்கிலாந்தை எவ்வாறு சமாளிக்கப்போகிறார்கள் என்பது. தற்போது அவுஸ்திரேலிய அணியினர்பாகிஸ்தானில் போட்டிகளை ஆரம்பித்தும் உள்ளனர்.

இறுதிப்போட்டியும் காலநிலையால் பெரிதும் பாதிக்கப்பட்டது. குறிப்பிட்ட நாளில்நடைபெறமுடியாமற்போன ஆட்டம் மறுநாளும் முழுமையாக நடாத்தப்பட இயலவில்லை. எனவேஆட்டம்25ஓவர்களுக்குமட்டுப்படுத்தப்பட்டது. முதலில் துடுப்பெடுத்தாடிய சிறிலங்கா 9 இலக்கிற்கு 98 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டார்கள் பதிலளித்த இந்தியா 4 இலக்கு இழப்பிற்கு 99 ஓட்டங்களையும் பெற்று சிறிலங்காவை 6இலக்குகளால் தோற்கடித்து சிங்கர் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டார்கள் இவ் ஆட்டத்தில் குறிப்பிடத்தக்கது சித்துவும், அசாரும் சோடி சேர்ந்து ஆடிச்சேகரித்த 71 ஓட்டங்களாகும் சித்து தன் எண்ணிக்கையாக 24 ஓட்டங்களையும், அசார் 45 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

சிங்கர் கிண்ண இறுதிப் போட்டியைப் பொறுத்த வரை அது திருப்திகரமானதாக அமைந்ததாகத் தெரியவில்லை களநிலை மழையின் காரணமாக விளையாட்டுக்குத்தகுதியற்றிருந்ததால் இந்திய, சிறிலங்கா அணித்தலைவர்கள் இருவரும் விளையாட மறுப்புத் தெரிவித்துள்ளார்கள் இருந்தும் மத்தியஸ்தர்களின் நிர்ப்பந்தத்தின் பேரிலேயே விளையாடியதாகக் குறை கூறியுள்ளார்கள் இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள இந்திய அணித்தலைவர் அசாருதீன், பொதுவாக மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்களில் பூவா, தலையா வெல்வது மிகமுக்கியமானதாகும் இதிலும் குறித்த ஓவர்கள் மேலும் குறைவடையும் நேரத்தில் இது இன்னும் பாதகமாக அமையும் உதாரணமாக எமது முதலாவது ஆட்டத்தில் நாம் பாதிக்கப்பட்டோம் இதே நிலையை இறுதியாட்டத்தில் சிறிலங்கா

நிர்மலன்

எதிர் நோக்கவேண்டியிருந்தது என்று கூறியுள்ளார் அதோடு கேத்தாராம அரங்கில் இருந்து அறிவித்தல் இன்றியே எஸ் எஸ் சி மைதானத்துக்கு ஆட்டம் மாற்றப்பட்டதை இந்திய முகாமையாளர் வடேகார் குறை கூறியுள்ளார் இத்தொடரில் துடுப்பாட்டச் சராசரியில் ஹசான் திலகரத்னா சிறந்தவீரராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இதே வேளைகூடுதல்ஓட்டங்களாக 195ஓட்டங்களைபெற்ற அர்ஜுனரணதுங்கதெரிவு செய்யப்பட்டுள்ளார்இவரே ஆட்டத்தொடர் நாயகனுமாவார் சச்சின் இத்தொடரின் ஒரேயொரு சதத்தை - முதலாவது சதம்-பெற்றமைக்காக பரிசு பெற்றுள்ளார்.

பந்து வீச்சில் வாசிம் அக்ரம் சராசரியில் முதன்மை பெறுகிறார். ஷேன் வோன் கூடு

(4ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம் நடாத்திய கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டி

யாழ் மாவட்டத்தில் பல்வேறு தரத்திலான மெய்வல்லுநர் போட்டிகள் நடைபெற்று முடிவடைந்துள்ள இவ்வேளையில் இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல கடந்த 9, 10, 11-ம் திகதிகளில் யாழ் மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் கனிஷ்ட போட்டியொன்றை நடாத்தியது.

வருட ஆரம்பத்திலேயே யாழ். மாவட்டப் பாடசாலைகள் தம்மட்டத்தில் இல்லங்களுக்கிடையிலான போட்டிகளை மிகக் கோலாகலமாக நடாத்தின. அதனைத் தொடர்ந்து, கோட்ட மட்டப் போட்டிகளும் பின்னர் வலய மாவட்ட மட்டப் போட்டிகளும் நடைபெற்றன. பாடசாலைகள் தொடர்பான போட்டிகளில் மாவட்ட மட்டப் போட்டிகள் அதியுயர் தரமானவை இப்போட்டிகள் யாழ். கல்வித் திணைக்களத்தினால் மிகுந்த சிரமங்களுக்கும் மத்தியில் நடாத்தப்பட்டுக்கொண்டு வருவதைக் குறிப்பிடவேண்டும்.

இதேவேளை யா. அ மெ. சங்கம் நடாத்திய கனிஷ்ட நிலைப் போட்டிகள் இன்னொரு வகையில் முக்கியத்துவம் வாய்ந்தது. யாழ் மாவட்டப் பாடசாலை மாவட்ட மட்ட வீரர் வீராங்கனைகள் தம் திறமையைக் காட்ட மேலும் சந்தர்ப்பம் கிடைக்குமா என எண்ணிய வேளை இப்போட்டி அவர்களுக்கு பெரும் வாய்ப்பாக அமைந்தது. கனிஷ்ட நிலையில் பாடசாலை மாணவர் தனியார் கழக வீரர்கள் எல்லோரையும் இணைத்து உயர் தரத்திலான திறமை வீச்சுக்கு வாய்ப்பளித்த நிகழ்வாக இது அமைந்தது சிறப்பாகக் குறிப்பிடப்பட வேண்டியதாகும் இத்தகைய போட்டியொன்று கனிஷ்ட நிலையில் இதுவே முதல் முறையாக நடைபெறுவது அவதானிக்கத்தக்கது.

விளையாட்டுத் துறையில் நிறைந்த ஆற்றலும் அனுபவமும் கொண்டவர்களின் அமைப்பினால் நடாத்தப்பட்ட இப்போட்டிகள் பல்வேறு சிறப்பம்சங்களை வெளிக்காட்டி நின்றன. நேர்த்தியான போட்டி ஒழுங்குகள், அதற்கேற்ற வகையில் மிகுந்த பணச்செலவு போன்றன அவதானிக்கப்பட்டன. போட்டியாளர்களைத் தெரிவு செய்வது போட்டி தொடர்பான வெளிநிலை ஏற்பாடுகள், மைதான ஏற்பாடுகள், நிர்வாக அமைப்பு முறைகள், பின்பற்றப்பட்ட போட்டி விதிமுறைகளும் ஒழுங்குகளும், நிறைவு நாளில் நடைபெற்ற வீரர், வீராங்கனைகள் கௌரவிப்பு வைபவங்கள் என்று எல்லாமே சுட்டிக்காட்டவேண்டிய அளவிற்கு மிகத்திறமையாகத் திட்டமிடப்பட்டிருந்தன.

தெரிவு செய்யப்பட்ட போட்டியாளர்களின் திறமை களத்தில் மிகச்சிறப்பாக வெளிப்பட்டது. யாழ்ப்பாணத்தின் மிகச்சிறந்த மெய்வல்லுநர்கள் தத்தம் திறமையை மருத்துவ பீட மைதானத்தில் அழகாக வெளிப்படுத்தினார்கள் இதே போன்று இவர்கள் காட்டிய திறமைக்குச்சரியான முறையில் பெறுமதி வாய்ந்த பரிசில்களும் வழங்கப்பட்டன தொடர்ந்தும் மெய்வல்லுநர்களுக்கு ஊக்கமும் நம்பிக்கையும் அங்கீகரிக்கப்பட்ட திருப்தியும் கிடைக்கும் என்ற நம்பிக்கை இப்போட்டிகளில் கலந்து கொண்ட எல்லோருக்கும் ஏற்பட்டது.

மருத்துவ பீட மைதானம் மிகவும் விலாசமானது. ஆனால் மெய்வல்லுநர் போட்டிகளை நடாத்துவதற்கு அது ஒரு வகையில் சாதகமற்றது. வெறுங்கட்டாந்தரையாக காணப்படுவது, வீரர்களுக்கு மனச்சோர்வை ஏற்படுத்தி விடக்கூடும். அதோடு ஒரு ஒதுக்குப்புறமான இடத்தில் மைதானம் அமைந்திருந்தமையும் சாதகம் குறைந்ததொரு காரணமாக அமைந்துவிட்டது. ஒரு விடயத்தை இங்கு குறிப்பிடுதல் பொருத்தம். மெய்வல்லுநர் போட்டிகள் நடைபெறும் போது ரசிகர்களின் பங்களிப்பு குறைவாகவே காணப்படுவதே அது. பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் இத்தகைய நிகழ்வுக்கு நிறைந்த ஆதரவு கொடுக்கவேண்டும்.

இப்போட்டிகளில் தென்மராட்சியின் பங்களிப்பு குறைவாக இருந்தது பரவலான வகையில் அங்கிருந்து போட்டியாளர்கள் வந்திருந்தால் இன்னும் தரம்கூடிய கடும்போட்டி நிலை காணப்பட்டிருக்கும். இதைவிட தெரிவுப் போட்டிகளில் தகுதி பெற்ற சில வீரர்கள் இறுதிப்போட்டியில் பங்குகொள்ள வில்லை என்பது வியப்பானது. மேலும் பாடசாலை மாணவர்கள் நிறையக் கலந்து கொண்ட போதும் அவர்களுக்கு ஆதரவாக வந்தவர்கள் ஒரு சிலரே காணப்பட்டனர். பாடசாலை மாணவர்கள் பெருமளவில் இவற்றைக் கண்டு பயன்பெறவேண்டும். அவர்களுக்காகத்தான் இத்தகைய நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன என்பதை தொடர்பு படுபவர்கள் கவனத்தில் எடுக்கவேண்டும்.

பெரும் செலவில் மிக எடுப்பாக நடைபெற்ற ஒருநிகழ்ச்சி பங்குகொண்ட போட்டியாளர்களுடன் மட்டும் முடிவடைந்து விட்டது துரதிர்ஷ்டவசமானதாகும். இன்றையநிலையில் இத்தகைய போட்டிகள் பல சிரமங்களுக்கும் ஆபத்துக்களுக்கும் இடையில் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

இத்தகையமுயற்சிகள் வீணே போய்விடக்கூடாது இவை நன்மை தருவன பாடசாலை மாணவர்களும், மற்றும் இளையோரும் இவற்றிற்குப் பெரும் ஆதரவு கொடுக்க வேண்டும். இத்தன்மை இருந்தால்தான் மேலும் மேலும் நிகழ்வுகளை செயற்படுத்த ஆர்வலர்களுக்கு துணிவும் விருப்பமும்ஏற்படும்.

## சிறிலங்காவிற்கு

தல் விக்கெட்டுகளாக 7 விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளார். ஆனால் தனி ஆட்டச் சிறந்த பந்து வீச்சுச் சராசரியை அவுஸ்திரேலியா ஸ்ரீவ் வோவ் 3/15 வகையில் பெற்றுக்கொள்கின்றார். அர்ஜுன ரணதுங்க இத்தொடரில் 2 முறை ஆட்டக்கதாநாயகனாகத்தெரிவு செய்யப்பட இறுதியாட்டத்தில் அசாருதீன் ஆட்ட நாயகனாகத்தெரிவு செய்யப்பட்டார்.

## இ.தொ.கா தீர்மானத்திற்கு செங்கொடிசங்கம்வரவேற்பு

(கொழும்பு)

இ.தொ.கா. தேசிய சபையும், தலைவர் தொண்டமானும் பொதுசன ஐக்கிய முன்னணி அரசுக்கு ஆதரவு தர முன் வந்துள்ளதை செங்கொடிச்சங்கம் வரவேற்றுள்ளது.

இது தொடர்பாக அச்சங்கத்தின் பேச்சாளர் ஒருவர் மேலும் கூறுகையில், மலையக அமைப்புக்கள் அனைத்தும் பல்வேறு பிரிவுகளாய் பிரிந்து கிடந்தன. இந்நிலை தொடர்வதால் மலையக சமூகத்திற்கு நன்மை கிடைக்கப் போவதில்லை என்பதை நாம் அடிக்கடி சுட்டிக்காட்டி வந்துள்ளோம் அந்தநிலைமையில் இன்று மாற்றம் தென்படுகிறது. மலையகத்தின் அனைத்து அமைப்புக்களும் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை ஆதரிக்கின்றன. எதிரணியில் உள்ள இ. தொ. காவும் தனது ஆதரவை வழங்க முன்வந்துள்ளமை வரவேற்கத்தக்கதே எனவும் தெரிவித்தார்.

## மீண்டும் அமுல்

எழுது வினைஞர், அதனோடிணைந்த சேவையில் உள்ளவர்களின் சம்பள முரண்பாடு நீக்குவது தொடர்பாக வந்து இரத்துச் செய்யப்பட்ட சுற்று நிருபம் மீண்டும் அமுலுக்கு வந்துள்ளது.

யாழ் அரச அதிபர் கொழும்பிலிருந்து அனுப்பிய செய்திக் குறிப்பிலேயே அச்சுற்று நிருபம் அமுலில் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார். பொது நிர்வாக அமைச்சிலிருந்து அனுப்பப்பட்ட சுற்று நிருபமே தற்போது மீண்டும் அமுலுக்கு கொண்டுவரப்பட்ட சுற்றுநிருபமாகும்.

## உள்ளூர் மூலப் பொருளால் கட்டடம் அமைப்பு

முற்றிலும் உள்ளூர் மூலப் பொருட்களைப் பயன்படுத்தி மாதிரிக் கட்டட அமைப்பொன்றை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன உட்கட்டுமானப் பகுதியினர் நல்லூர் காட்சியகத்தில் அமைத்துள்ளனர்.

மிகவும் அழகுற அமைக்கப்பட்டுள்ள அக்கட்டடம் உள்ளூர் சுண்ணாம்பினாலும் செங்கற்களாலும் கட்டப்பட்டதுடன் ஒட்டிசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை ஓட்டினால் வேயப்பட்டுள்ளதுடன் அவற்றின் கதவுகள் யன்னல்கள் என்பன மிகவும் கவர்ச்சிகரமான முறையில் வன்னிப் பகுதியில் உற்பத்தியாகும். பிரம்பினால் ஆக்கப்பட்டுள்ளன.

உள்ளூர் கட்டுமானப் பொருள்களை பயன்படுத்தி கட்டப்பட்ட இக்கட்டட அமைப்பை பெருமளவு மக்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது

## பிறப்பு,இறப்பு விவாக பதிவு

யாழ். றோட்டறிக் கழகம்


A/L 95
DAY CLASSES
(பகல் நேர வகுப்புக்கள்)
கலை - வர்த்தக பிரிவுக்கு
உரிய சகல பாடங்களும்
ஆரம்பம் :- 27- 9- 94
(செவ்வாய் காலை 8 மணி)
புதிய உயர் கல்லூரி
New College of High Studies
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(சி-10390)



தவறிவிட்டது

23-09-94 பி ப 4 மணிக்கும் 5 மணிக்கும் இடையில் கச்சாய்க்கும் நுணாவிலுக்கும் இடையில் சி. நடராசாவின் மணிப்பேசும் அடையாள அட்டையும் ஒரு தொகைப்பணமும் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் அம்பிகா மருந்தகம் சாவகச்சேரியில் ஒப்படைக்கவும் தகவல் சி நடராசா கச்சாய் தெற்கு கொடிகாமம். (9508)


ஈராண்டு நினைவுதினம்



தமிழ் மண்ணில்
19 - 09 - 1943
விண்ணில்
18 - 09 - 1992

அமரர் சிவகுரு சண்முகநாதன்
(இனியவன்)
(83, கண்டிவீதி, தேத்தாவடி சாவகச்சேரி)

திதி. 25 - 09 - 1994 ஞாயிறு தினம்

ஈராண்டு இரு யுகமாய் கழிந்து போனாலும்
எம்மோடு இருந்து வழிகாட்டும் நின்பாசம்
பாரழிந்து போனாலும் மாறாதையா!
''போர்'' கொண்டு வழி நடத்தும் ''தம்பி'' காலத்தில்

## பிறப்பு, இறப்பு விவாக பதிவு சான்றிதழ் தமிழில் தேவை

### நுவரெலிய மக்கள் கோரிக்கை

(கொழும்பு)

நுவரெலியா பிரதேசத்தில் பெரும்பாலும் தமிழர்களே வாழ்கின்றனர். இவர்களின் பிறப்பு, இறப்பு மற்றும் திருமணச்சான்றிதழ்களை தமிழிலே வழங்குவதற்கு பிரதமர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா தலைமையிலான அரசுநடவடிக்கை எடுக்குமென நாம் எதிர்பார்க்கிறோம். இவ்வாறு நுவரெலியா பிரதேச சபையின் உறுப்பினர் ராஜகோபால் நுவரெலியா மக்கள் சார்பாக அரசாங்கத்திற்கு விடுத்த வேண்டுகோள் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் அவ் வேண்டுகோளில் மேலும் குறிப்பிடுகையில் தோட்டங்களில் வாழும் படித்த இளைஞர் யுவதிகளுக்கு அரசாங்க திணைக்களங்களில் வேலை வாய்ப்பு கிடைப்பது மிகவும் கஷ்டமாக உள்ளது. தோட்டங்களில் வசிப்பவர்கள் அடையாள அட்டை பெற்றுக்கொள்வதிலும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். மின்சாரம் போன்ற அத்தியாவசிய தேவைகள் இல்லாது அவர்கள் பெரிதும் அவதியுறுகின்றனர். எனவே புதிய அரசு இப்பிரச்சினைகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே மலையக மக்களின் எதிர்பார்ப்பு ஆகும் எனவும் தெரிவித்துள்ளார்.

## ஐ. சி. ஆர். சி, மூலம் நோர்வே உதவி தொடரும்

(கொழும்பு)

நோர்வே செஞ்சிலுவை சங்கம், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்துடனான கூட்டு நடவடிக்கைகளை தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது எனினும் அதன் மனிதாபிமான பணிகள் மற்றும் உதவிச் செயல் திட்டங்கள் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் மூலமாக தொடர்ந்தும் செயற்படுத்தப்படும்.

இது தொடர்பாக பத்திரிகைகளுக்கு விடுக்கப்பட்டுள்ள ஒரு செய்தி மேலும் குறிப்பிடுகையில்,

இலங்கை மக்களுக்கான நோர்வே செஞ்சிலுவை சங்கத்தின் உதவி சகல மட்டங்களிலும் தொடர்ந்து வழங்கப்பட்டுவரும். அதேசமயம் இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் சகல நடவடிக்கை தொடர்பான பூரணமான அறிக்கை ஒன்று கோரப்பட்டுள்ளது அவ் அறிக்கை பூரணமாக ஆராயப்பட்டதன் பின்னரே அதனூடான சகல நடவடிக்கைகளையும் மீண்டும் ஆரம்பிப்பது குறித்து பரிசீலனை செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வருடாந்த உற்சவம்

(குருநகர்)

குருநகர், றெக்கிளமேசன் அருள்மாதாவின் ஆறாம் ஆண்டு விழா 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமைமாலை 6-மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி மூன்று தினங்கள் நடைபெற இருக்கின்றன.

29ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு திருச்சொரூப ஆசிருடன் ஆறாம் ஆண்டுவிழா சிறப்புற நிறைவுறும். (21)

---

### யாழ். றோட்டறிக் கழகம்

## கல்விப் பரிவர்த்தனைக் குழு

## *Group Study Exchange*

### of the Rotary Foundation of Rotary International

சர்வதேச றோட்டறியின், றோட்ட்றி நிதியத்தின் ஆதரவிலான கல்விப் பரிவர்த்தனைக் குழுத் திட்டத்தின் கீழ் இலங்கை றோட்டறி மாவட்டத்தின் சார்பில் செல்லும் 4 பேர் கொண்ட கல்விப் பரிவர்த்தனைக்குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

★ நிரந்தரமான தொழிலிலுள்ள பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், நிர்வாக தொழில்நுட்ப அலுவலர்கள், அரச மற்றும் தனியார் வங்கி அலுவலர்கள், தனியார் துறை அலுவலர்கள் ஆகிய இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

★ விண்ணப்பதாரிகளது உயர் கல்வித் தகைமை, தொழிற்துறைத் தகைமை ஆங்கில மொழியில் சரளமாகப் பேசும், எழுதும் ஆற்றல் என்பன கவனத்திற் கொள்ளப்படும்.

★ வயதெல்லை இல்லை, சுற்றுலாக்காலம் 4 முதல் 6 வாரங்கள் கல்விப் பரிவர்த்தனைக் குழு செல்லும் நாடு இதுவரை அறிவிக்கப்படவில்லை.

※ றோட்டறக்ற்கழக உறுப்பினர்களும் விண்ணப்பிக்கலாம் றோட்டறிக்கழக உறுப்பினர்களின் குடும்பத்தினர் விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்களாவர்

யாழ் றோட்டறிக் கழகம் சார்பில் இருவர் தெரிவு செய்யப்பட்டு மாவட்ட தேர்வுக் குழுவிற்கு சிபார்சு செய்யப்படுவர். இறுதித் தேர்வு கொழும்பில் றோட்டறி மாவட்ட தேர்வுக் குழுவினால் நடத்தப்படும்..

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரியின் பிரயாணச் செலவினை றோட்டறி நிதியமும், சுற்றுலாக் காலத்திலான செலவினை உபசரிக்கும் றோட்டறி மாவட்டமும் பொறுப்பேற்கும்

மேலதிக விபரங்களுக்கும், விண்ணப்பப் படிவங்களுக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

Rtn. ஈ. சரவணபவன்
தலைவர் யாழ் றோட்டறிக் கழகம்,
மே/பா. உதயன் பணிமனை,
யாழ்ப்பாணம்.

Rtn. எஸ். சோதிலிங்கம்
சர்வதேச சேவை இயக்குநர்
யாழ். றோட்டறிக் கழகம்,
மே/பா ஹற்றன் நஷனல் வங்கி
யாழ்ப்பாணம்.

**விண்ணப்ப முடிவு திகதி: 1994 - 09 - 28**

Rtn தி. திருநந்தகுமார்,
செயலாளர் யாழ் றோட்டறிக் கழகம்.

292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-10406)

---

பாரழிந்து போனாலும் மாறாதையா!
''போர்'' கொண்டு வழி நடத்தும் ''தம்பி'' காலத்தில்
பேர் கொண்டு தமிழீழம் சிறக்கும் என்றாய்!
சோர்வின்றி நாமும் துன்பங்கள் ஏற்று வந்தோம்!
தாயவிடிவுக்காய் என்றும் காத்திருப்போம்!

அன்பு மனைவி இராஜி சண்முகநாதன்
பிள்ளைகள் ச. தமிழினி(இனியவள்)
ச. சுதந்திரன்
.ச யாழினி
ச. கலைமகள்

85 கலாசாலை வீதி,
திருநெல்வேலி
தமிழீழம்

அன்புள்ளங்கள் அனைவரையும்
அழைக்கின்றோம். (9422)

---

## 4-ம் ஆண்டு நினைவாக...

தாயின் மடியில்:
25-08-1973

தாயக மண்ணில்:
25-09 1990



### வீரவேங்கை தவக்குமார்

(சிவசுப்பிரமணியம் ஜனார்த்தனன்)

தாயகம் காக்க தன்னுயிர் ஈந்த
எம் ஆருயிர் மகனே ஜனா!
நான்கு ஆண்டுகள் சென்றாலும்
எம் நினைவு உன்னை விட்டு அகலாது
உன் முகத்தைக் காணும் நாள் எந்நாளோ!

இவருடன் வீரச்சாவடைந்த மாவீரர் கோபிநாத், பரதன் ஆகியோரையும் நினைவு கூருகிறோம் 25-9-94 இன்று இவரது நினைவு நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு போராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஜனார்த்தனன் வீதி,
ஏழாலை கிழக்கு,
ஏழாலை. (9456)

உனது பிரிவால் வாடும்
அம்மா, அப்பா, அண்ணா,
உறவினர்.

யாழ்ப்பாணம்

சிந்தனைக்கு..

முயற்சியே மேற்கொள்ளாதவன்தான்
தோல்வியிலிருந்து விதிவிலக்குப் பெற்றவன்
- றிச்சர்ட் வேட்லி

ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 25 09-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால்பெட்டி எண்-05

# தேர்தல் களத்தில் இளைய தலைமுறை

எதிர்வரும் நவம்பர் மாதம் 9-ம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஆறு பேர் போட்டியிடவுள்ளதாக தற்பொழுது வெளியாகும் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஒக்டோபர் மாதம் 7-ம் திகதியே ஜனாதிபதி வேட்பாளர் மனு தாக்கல் செய்யும் தினமாக இருப்பதினால் சிலசமயம் இதில் சிலமாற்றங்களும் நிகழலாம்

ஆனால், இவ் ஆறு பேர்களில் இரண்டு பேர் திட்டவட்டமாகத் தேர்தலில் போட்டியிடுவார்கள் என்று உறுதியாகியுள்ளது: இதில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் எதிர்க்கட்சித் தலைவர் காமினி திசாநாயக்காவும், பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பில் பிரதமர் சந்திரிகா குமாரதுங்காவும் போட்டியிடுவார்கள் என்பது தெளிவாக ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளது;

இத்தேர்தலானது அதாவது சந்திரிகாவும் காமினியும் போட்டியிடும் தேர்தலானது ஒருவகையில் முக்கியமானதும், முன்னைய ஜனாதிபதித் தேர்தல்களில் இருந்து வேறுபாடானதுமாகும்- அதாவது ஐக்கிய தேசிய கட்சி எதிர்க்கட்சி ஸ்தானத்தில் இருந்து எதிர்கொள்ளும் முதலாவது ஜனாதிபதித் தேர்தல் என்பதோடு, இரு கட்சியிலும் இளைய தலைமுறையினர் போட்டியிடும் தேர்தலுமாகும்.

பொதுஜன ஐக்கிய முன்னணியைப் பொறுத்து யார் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் என்பதில் சற்றுத் தடுமாற்றம் இருந்திருப்பினும் பெரும்பாலோரால் எதிர்பார்க்கப்பட்டது போன்று பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா நியமனம் பெற்றுள்ளார். இது அக்கட்சியைப் பொறுத்து சிறப்பானதொரு முடிவு என்றே கொள்ளலாம்.

இந்நிலையில் ஜனாதிபதித் தேர்தல் களத்தில் இனி யார் குதித்தாலும், யார் விலகிக் கொண்டாலும் பிரதான போட்டியாளர்கள் காமினி திசாநாயக்காவும், சந்திரிகா குமாரதுங்காவுமே ஆகும்-

இதன் பிரகாரம் காமினி திசாநாயக்காவிற்கும், சந்திரிகா குமாரதுங்காவிற்கும் இடையில் நடைபெறவுள்ள போட்டியில் சந்திரிகாவிற்கே வெற்றி வாய்ப்பு அதிகம் என அரசியல் விமர்சகர்கள் கருதுகின்றனர். இருப்பினும் இருவருக்கும் இடையிலான போட்டியானது இலகு

# வடக்கின் வாக்குகளை பெறவே சந்திரிகா முயற்சி செய்கிறார்

- ஒஸி அபயகுணசேகரா

(கொழும்பு)

பாராளுமன்ற தேர்தல் நடந்ததைக் கண்டு ஜனாதிபதி தேர்தலில் வெல்ல முடியாது என்பதை உணர்ந்த பிரதமர் சந்திரிகா வடக்கிலுள்ள வாக்குகளைப் பெறுவதற்காகமுயற்சி செய்கிறார். அதற்காக அவர்கள் கேட்கும் எல்லாவற்றையும் கொடுக்கிறார். இவ்வாறு சிறிலங்கா மக்கள் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஒஸி அபயகுணசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பு பழைய நகர மண்டபத்தில் முன்னாள் சபாநாயகர் எம். எச். முகமதுவை பாராட்டுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய ஒஸி அபயகுணசேகர மேலும் கூறுகையில்,

1988-ம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் போது திருமதி சிறிமாவோ விற்கு செல்ல வேண்டிய வாக்குகளை உடைப்பதற்காகவே நான் போட்டியிட்டேன். முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவுடன் எனக்கு இருந்த தொடர்புகளால் நான் இதைச் செய்யவில்லை. விஜயகுமாரதுங்க இறப்பதற்கு முன்னர் தெரிவித்த விருப்பத்தைநிறைவேற்றவே நான் அதே தேர்தலில் போட்டியிட்டேன்.

இப்பொழுது வடக்குக்கு மின்சாரம் வழங்குவதாகக் கூறுகிறார்கள். இவ்வளவு காலமும் எதிர்க்கட்சியில் இருந்த போது வடக்குக்கு ஒரு மெழுகுதிரி கூட கொடுக்க வேண்டாம் எனக் கூறிவந்தவர்கள் இவர்கள்.

விஜயகுமாரதுங்கவை கொலை செய்தது ஐ தே. கவினர் தான் என சந்திரிகா தேர்தல் காலத்தில் கூறிவந்தார். ஆனால் இப்போது அவரைக் கொலை செய்தது ஜே.வி.பி எனக் கூறுகிறார்.

கடந்த பாராளுமன்ற தேர்தலில்ஐ.தே கவைதோற்கடித்தது மக்களல்ல. ஐ தே.கவின் தலைவர்களே ஐ.தே கவின் தோல்விக்கான பொறுப்பை அந்த தலைவர்களே ஏற்க வேண்டும்.

இம்முறை தேர்தல் மேடையில் பிரேமதாசாவின் உருவப் படம் ஒன்றை வைத்தால் வாக்குகள் பீறிட்டுவரும் பிரேமதாசாவின் கொள்கைகளை முன்னெடுத்து செல்வதற்காக காமினிக்கு வாக்களியுங்கள். எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஐ, தே. கவை ஆதரியுங்கள் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

# பாடசாலைக் காணியில் வெளியார் குடியேற்றம்

(கொழும்பு)

மாத்தளை வாரியப்பொல தமிழ் வித்தியாலயத்திற்கு சொந்தமானகாணியில் வெளியார்கள் அத்துமீறி குடியேறி உள்ளதாகவும், அவர்களை அவ் இடத்திலிருந்து வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும், உக்குவளைக் கோட்டக் கல்வி பிரதிப் பணிப்பாளர் திலகரத்தின பண்டா பிரதேச செயலாளருக்கு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இக் கடிதத்தில் அவர் மேலும் குறிப்பிடுகையில், பாடசாலை விடுமுறைக் காலத்தின் போது பாடசாலைக்கு அருகில் வசித்து வரும் ஒரு சிலர் பாடசாலைக்கு சொந்தமான காணியில் அத்துமீறிக் குடியேறியுள்ளனர். இதனால் பாடசாலை சுற்றாடல் மாசடைவதுடன் சிறார்களின் கல்வி நிலையும் பெரும் பாதிப்படைந்துள்ளது. இவர்கள் தொடர்ந்து குடியிருப்பார்களேயானால் பல்வேறு பிரச்சினைகள் தோன்ற வாய்ப்புண்டு. எனவே அவர்களின் குடியிருப்புகளை அகற்றவும் அவர்களை அவ்விடத்திலிருந்து வெளியேற்றவும் நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளார்.

# பொலிஸ் அதிகாரங்கள் மாகாண சபைக்கு கிட்டுமா?

(கொழும்பு)

விசேட மாகாண பொலிஸ் படை தங்களுக்கென அமைக்கப்படவேண்டுமென பல மாகாண சபைகளும் கோரிக்கை விடுத்துள்ளன. இது விடயத்தில் அரசாங்கம் விரைவில் ஒரு முடிவை எடுக்க வேண்டிய நிலை இருப்பதாக சட்டமாஅதிபர் திணைக்களப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்:

அவர் மேலும் கூறுகையில், பொலிசாரின் அதிகாரங்கள் மற்றும் கடமைகள் சம்பந்த... ம் நிறைவேற்றப்பட்டுள்ளபோதும் சட்டம் இன்னமும் அமுல் செய்யப்படவில்லை எனவும் அப்பேச்சாளர் தெரிவித்தார்

தற்போதுள்ள பொலிஸ் கமிஷன் சட்டத்தின் கீழ் பொலிசார் மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட வேண்டும். தேசிய பொலிஸ் படை, மாகாண பொலிஸ் படை, மெட்ரோ பொலிட்டன் பொலிஸ் படை என்பனவே அவை ஆகும். இப் பொலிஸ் கமிஷன் சட்டத்தை அரசாங்கம் அமுல் செய்யும் வரை

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

விவசாயம், கடல்வளம், விலங்கு வேளாண்மை மற்றும் நீர்ப்பாசனம் ஆகியதுறைகளின் செயற்பாடுகள் தொடர்பான அடுத்த ஆண்டுக்கான இலக்குகளை முன்வைக்கும் கருத்தரங்கு தொடரின் மூன்றாவது அமர்வு எதிர்வரும் செவ்வாய், புதன் கிழமைகளில் வட்டக்கச்சியில் நடைபெறவுள்ளது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இக் கருத்தரங்கில் காலபோக சிறுபோக விவசாய செய்கையில் நிறைவேற்றப்பட்ட இலக்குகள் மற்றும் விலங்கு வேளாண்மையில் எய்தப்பட்ட இலக்குகள் என்பன பற்றியும், புதிய விவசாய ஆராய்ச்சி திட்டங்கள் தூய விதை உற்பத்திகள், உள்ளீடு விநியோகம், சந்தைப் படுத்தல், அரச், அரச சார்பற்ற நிறுவன செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் ஆகிய விடயங்கள் பற்றியும் ஆராயப் படவுள்ளது.

## திருத்தம்

கடந்த வெள்ளி மஞ்சரியில் 'ஈழத்து சஞ்சிகைகளின் வளர்ச்சியும், பின்னடைவும்' என்ற கட்டுரையில் சரஸ்வதி சஞ்சிகை நான்காவது இதழுடன்

## காந்தீயக் குழந்தை

காந்திக்கு ஒருநாள் ஆசை வந்தது
தன் காந்தீயக் குழந்தையைக் காணவிழைந்தது
அகவை நாற்பத்தேழு ஆகியிருக்குமேயென
அண்ணலும் அகமகிழ்ந்து பாரதம் வந்தார்

வந்த காந்தியை வரவேற்க யாருமில்லை
நொந்து நொடிந்து காந்தியும் துவண்டார்
பந்த பாசத்துடன் வந்த காந்தி - பாரதத்தில்
பாதகர் செயலால் தன் குழந்தை அழிந்ததைக்
கண்டார்

பரிதவித்த காந்தியை பாரதத்தாயும் கண்டாள்
பயந்து நடுங்கி அவரிடம் வந்தாள்
காந்தீயக் கொலையைக் கவலையுடன் சொன்னாள்
காந்தியும் வகை தெரியாது தேம்பியே நின்றார்

தேம்பிய காந்திக்கு தாயும் தேறுதல் சொன்னாள்
ஓங்குதே உன்குலம் உயர்வுடன் என்றாள்
பார்த்திபன் உன் வாரிசு பாரினில்என்றாள்-காந்தியும்
பாசமுடன் தன் குழந்தையைக் காண தமிழீழம்
வந்தார்

பார்த்திபன் பெருமையைப் பணிவுடன் கண்டார்
பூத்த முகத்துடன் பொலிவுடன் நின்றார்
பெற்ற குழந்தையைப் பெரிதுவந்து பார்த்தார்
நற்றமிழில் வாழ்த்தி நலமுடன் மீண்டார்.

- ஞானா

## நிலையாய் நிலைத்தாய்

இந்தியாவே திலீபனை
தீயாக்கியதேன்?
நீறு பூத்த நெருப்பாய்
ஈழமே இருந்த போது
உனது நாட்டின்
உடைவைத் தடுக்க
எம் நாட்டிலா
''செங்கட்டிச் சூளை''
செய்ய நினைத்தாய் ?
அதற்காகவா சந்தர்ப்பம் பார்த்தாய்,
நல்ல மண்ணிருக்கும்,
குளிர்ந்த நீரிருக்கும்
நிறைய கூலியிருக்கும்
குளைத்தடுக்கினால் சூளை
இதுதானே உன் நினைப்பு.

சரி, எல்லாமே சரி
கால் வைத்த இடமும் - அதற்கு
நீர் கூறிய காரணமும் தான் பிழை.
உனது இருண்ட மூளையை
எம் நாட்டிலெழுந்த ''சூரியன்'' கண்டான்
அதையே திலீபன்
எமக்குச் சொன்னான்;
சூழ்நிலை அப்படியிருக்கையில் - திலீபனே
உனது, போர் முறை சரிதான்
இந்தியத்தின் கால்களினுள்
நசியுண்ட காந்தீயத்தை
கையிலேந்தி தீயாய் நீ
பசி கிடந்ததும் சரிதான்
என்ன செய்வது............
காந்தியப் போர்வைக்குள்
காந்தியும் தீயான போது
உனையும் தீயாக்கிவிட்டோம்
திலீபனே! இழந்த துயரில்
தவிக்கும் போதெல்லாம் - நீ
அகிம்சைக்குப் பதிலாய்
ஆயுதத்தையே தூக்கி இருக்கலாம்

னும் இருவருக்கும் இடையிலான போட்டியானது இலகுவானதாக இருக்கும் என்று முடிவு கட்டிவிட முடியாது.

கடந்த பொதுத் தேர்தலில் பொது ஜன ஐக்கிய முன்னணி வெற்றி பெற்றபோதும் அதனால் மொத்த வாக்குகளில் 50 வீத வாக்குகளை பெற முடியவில்லை என்பது முக்கியமானது- முஸ்லிம் காங்கிரஸ் போன்றவற்றின் வாக்குகளை ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா பெறக் கூடிய வாய்ப்புக்கள் இருப்பினும் தேர்தல் வெற்றிக்காக அடித்தவர்களையும் நம்பியிருக்க வேண்டிய நிலையிலேயே கட்சிஉள்ளது-

ஆனால் தேர்தல் பிரசாரத்தைப் பொறுத்து பெரும் சாதகமான வாய்ப்பையே பொதுஜன ஐக்கிய முன்னணி கொண்டுள்ளது- ஐ-தே-க- மீது நீண்டதொரு ஊழல் மோசடிப் பட்டியலை வைத்துள்ள பொ.ஐ- முன்னணியின் குற்றச்சாட்டுகளுக்குஐ-தே-கா வால் பதில் அளிக்க முடியுமா என்பது சந்தேகமே-

அத்தோடு இனப்பிரச்சினை தொடர்பாக எடுக்கப்பட்ட முன்னேற்றகரமான நடவடிக்கைகள், விலைவாசிகளில் கொண்டுவந்த இறக்கம், எம்பிலிப்பிட்டி மாணவர் தொடர்பான விவகாரத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்பனவற்றால் பிரசாரத்திற்கான வாய்ப்புக்கள் அதிகமாகும்.

ஐ-தே-கவைப் பொறுத்தோ இவ்வாறான வாய்ப்புக்கள் எவையும் இருப்பதாக இல்லை- கடந்த காலத் தவறுகளுக்கு மன்னிப்புக் கோருவதே பிரதான தேர்தல் யுக்தியாக இருக்க வாய்ப்புண்டு அத்தோடு கடந்த பொதுத் தேர்தலில் ஐ-தே-கவின் வெற்றிக்கு கணிசமான பங்காற்றிய தொண்டமானின் குழப்பமான நிலை அதனை மேலும் நெருக்கடி நிலை ஒன்றிற்கே தள்ளியுள்ளது எனலாம்- இந்நிலையானது ஐ-தே-க- தன்னம்பிக்கையுடன் பிரசாரத்தில் ஈடுபடுவதற்கே உற்சாகம் ஊட்டுவதாக இல்லை-

அத்தோடு ஐ-தே- கட்சிக்குள் இன்று கூர்மையடைந்துள்ள உள்முரண்பாடும் தேர்தலைக் கணிசமான அளவில் பாதிக்கும் என்றே எதிர்பார்க்கலாம்- தேர்தல் களத்தில் ஐ-தே-கவினர் தமக்குள் மோதிக் கொள்ளாது விடினும் ஒத்துழைப்பு அதாவது கூட்டு முயற்சி குறைவாக இருப்பின் அது கூட பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடும்-

இந்தவகையில் ஜனாதிபதித் தேர்தலென்பது சந்திரிகா குமாரதுங்காவிற்கு வெற்றிக்கான போட்டியாக மட்டும் இருக்க காமினி திசாநாயக்காவிற்கு வெற்றிக்கான போட்டியாக மட்டுமல்ல, படுதோல்வி ஏற்பட்டுவிடாது பாதுகாப்பதற்கான போட்டியுமாகவும் அமையவுள்ளது-

மற்றும் கடமைகள் சம்பந்தமாக அரசியல் யாப்பின் 13 ஆவதுதிருத்தவிதிகளுக்கமைய 1990 ஆம் ஆண்டின் முதலாம் இலக்க பொலிஸ்கமிஷன்சட்டங்கம் அமுல் செய்யும் வரை மாகாண சபைகளுக்கான பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட மாட்டாது என்பது குறிப்பிடத்தக்கது.

சிகை நான்காவது இதழுடன் மறைந்து போனது என்றிருப்பதை 7 வருடங்களின் பின்னர் 62ஆம் ஆண்டின் நான்காவது இதழுடன் மறைந்து போனது என்றிருக்க வேண்டும்.

அகிம்சைக்குப் பதிலாய்
ஆயுதத்தையே தூக்கி இருக்கலாம்
என என்னிதயம் கூறுதடா
தியாகியே திலீபா - நீ
தாயகத்தை நிலையாய்
நினைத்தாயடா - எம் நெஞ்சில்
நிலையாய் நிலைத்தாயடா.

- வி. நாவலன்

## மலையகத்தில் குழப்பம் தீயசக்திகள் முயற்சி

(கொழும்பு)

மலையகத்தில் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் வேலையில் பல்வேறு பிரச்சினைகளை ஏற்படுத்தி சிக்கலை உருவாக்கவும், தொழில் நிறுவனங்களில் அமைதியின்மையும் ஏற்படுத்த சில தீய சக்திகள் திட்டமிட்டு செயற்பட்டு வருகின்றன. இதை நாம் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். இவ்வாறு விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார, கிராமிய தொழில் துறை அமைச்சர் எஸ். பி. திசாநாயக்கா தெரிவித்தார்.

அட்டன் டன்பார் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற நுவரெலியா மாவட்டப்பாடசாலைகளுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு வழங்கும் வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில் விளையாட்டுத் துறை தேசிய ரீதியிலும், அகில இலங்கை ரீதியிலும் முன்னேற வேண்டுமானால் நமது விளையாட்டுக்களை கிராமிய மட்டத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

## லஷ்மன் கதிர்காமர் நியூயோர்க் பயணம்

[கொழும்பு[

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் உரையாற்றுவதற்காக வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நியூயோர்க் பயணமாகவுள்ளார்.

புதிய அரசு பதவியேற்றதன் பின்னர், அரசின் முக்கிய அமைச்சர் ஒருவர் மேற்கொள்ளும் முதல் வெளிநாட்டுப் பயணம் இதுவாகும்.

## இ.தொ.காவின் மாநாடு; அடுத்த பெப்ரவரியில்

(கொழும்பு)

இ.தொ.காவின் அடுத்த பேராளர் மாநாடு அடுத்த ஆண்டு பெப்ரவரி 15ம் திகதி நடைபெறும். இவ்வாறு இ.தொ.கா தலைவர் எஸ். தொண்டமான் அறிவித்துள்ளார்.

அட்டன் நகரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில், இம் மாநாடு கடந்த 5ம் திகதி நடத்தப்படுவதாக இருந்தது எனினும் தோட்டக் கமிட்டி மாவட்டக் கமிட்டி பேராளர்கள் மற்றும் தேசிய சபைக்கான பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டதும் இம் மாநாடு நடைபெறும் என்றும் குறிப்பிட்டார்.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994.09.25**

**ஞாயிறு இரவு**

08. 01 -தியாகதீபம் லெப்ரினன்ட் கேணல் திலீபனின் 7ம் ஆண்டு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி- ந.கோகுலன் எழுதிய ''சத்தியப் போரில் திலீபன்''
08. 20 -விடுதலைக் கீதங்கள்
08. 30 -செய்திகள்
08. 40 -லெப்ரினன்ட் கேணல் சுபன் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி - சிவரஞ்சன் எழுதிய 'மன்னாரில் விளைந்த மாணிக்கம்'

**1994.09.26**

**திங்கள் காலை**

07. 02 -மாவீரவணக்கம்
07. 15 -நீங்கள் கேட்டவை
07. 30 -செய்திகள்
07. 35 -பத்திரிகைச் செய்திகள்
07. 40 -தியாகதீபம் லெப்ரினன்ட் கேணல் திலீபனின் 7ம் ஆண்டு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி - தமிழீழன் எழுதிய ''தகர்ந்த கோட்டையில் தவழ்ந்த புலிகள் கொடி''

## வெளிநாடு வேலை மோசடி போலி முகவர் மீது வழக்கு

(கொழும்பு)

வெளிநாட்டு வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாக கூறி பண மோசடி செய்யும் நபர்களுக்கு எதிராக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் வழக்குத் தாக்கல் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. இது வரையில் இத்தகைய மோசடிப் பேர்வழிகளில் பன்னிரண்டு பேருக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் 1020 தொழில் முகவர்நிலையங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இப்படிப் பதிவு செய்யப்பட்ட முகவர் நிலையங்களிலோ அல்லது வேறு எவரினாலுமோ மோசடிக்கு உள்ளடக்கப்பட்டவர்கள் இருந்தால் உடனடியாக பணியகத்திற்கு முறையிடுமாறு கோரப்பட்டுள்ளது. பணியகத்திற்கு கிடைக்கும் புகாரின் அடிப்படையில் திடீர் சோதனைகள் நடத்துவதில் ஈடுபடுவதுடன் பண மோசடி செய்யும் முகவர்கள் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டு இரண்டு இலட்சம் ரூபா வரையிலான அபராதம் விதிக்கவும் இரண்டு வருட சிறைத் தண்டனை விதிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தற்போது இத்தகைய மோசடி சம்பந்தமான புகார்கள் மாதாந்தம் 5-10 வரைதான் கிடைப்பதாக கூறப்படுகிறது.

## 'ரெலிக்' ஆங்கிலம் பயிற்சி யாழ்ப்பாணத்தில்

(யாழ்ப்பாணம்)

'ரெலிக்'' ஆங்கில ஆசிரியர் பயிற்சி அடுத்த ஆண்டு தை மாதம் முதல் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருப்பதாக ஆங்கில பிரதிக் கல்விப் பணிப்பாளர் நாயகம் நிகால் குரே தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் வவுனியாவில் நடைபெற்ற பயிற்சியில், யாழ் மாணவர்கள் கலந்து கொள்ளாததால், இம்முறை யாழ்ப்பாணத்திலேயே நடத்த சம்மதித்துள்ளதாக தெரியவருகிறது. (88)

## உண்ணாவிரத நிகழ்வுகளில் கலந்துகொள்ள கோரிக்கை

''லெப் கேணல் திலீபன் அவர்களின் 7-ம் ஆண்டு நினைவு அஞ்சலி நிகழ்வை மிகவும் சிறப்பாகவும் எழுச்சியாகவும் கொண்டாடுவதன் பொருட்டு, நாளை காலை 7. 00 மணிமுதல் பிற்பகல் 4. 00 மணிவரை வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி கோட்டங்களில் உண்ணாவிரத நிகழ்வுகளுக்கு வேண்டிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி உண்ணாவிரத நிகழ்வில் சகல அரச திணைக்கள, கூட்டுத்தாபன, கூட்டுறவு சங்க ஊழியர்களும் கலந்துகொள்ளும்படியும், வாகன வசதி உள்ள நிறுவனங்கள் தங்களின் வாகனங்களை பயன்படுத்தும்படியும் தமிழீழ நிர்வாக சேவை பொறுப்பாளர் கேட்டுக்கொள்கிறார்.''

★ ★

தியாகி லெப். கேணல் திலீபனின் ஏழாம் ஆண்டு நினைவின் இறுதி நாளான நாளை கோட்ட ரீதியாக நடைபெறவுள்ள அடையாள உண்ணாவிரத நிகழ்வுகளில் அனைத்து தொழிற் சங்கங்களின் உறுப்பினர்களையும், எழுச்சிகரமாகவும், உணர்வு பூர்வமாகவும் கலந்துகொள்ளுமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

★ ★

''தியாகி லெப். கேணல் திலீபன் நினைவாக நாளை கோட்டரீதியாக நடைபெறும் இறுதி நாள் உண்ணாவிரத நிகழ்வுகளில் சகல விளையாட்டுக் கழகங்களினதும் உறுப்பினர்களையும் அவ்வவ் கோட்டங்களில் சென்று கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக்குழு கேட்டுக்கொள்கின்றது.''

★ ★

''தியாகி லெப். கேணல் திலீபன் நினைவாக நாளை இறுதி நாள் அன்று நடைபெறவிருக்கும் உண்ணாநோன்பு நிகழ்வுகளில் சகல சி. க. கூ. சங்க அங்கத்தவர்களையும் தங்கள் தங்கள் கோட்டங்களில் சென்று கலந்துகொள்ளுமாறு யாழ். மாவட்ட சி. க. கூ. சங்க சமாசம் கேட்டுக்கொள்கின்றது.''

## தியாகி திலீபன் நினைவாக உண்ணாவிரத நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

தியாகி லெப். கேணல் திலீபனின் 7ஆம் ஆண்டு நினைவாக யாழ். குடாநாடெங்கும் உண்ணாவிரத நிகழ்வுகள் வட்டரீதியாக நடைபெறவுள்ளன.

இன்றைய நிகழ்வுகளில் வலிகாமம் கோட்டத்தில் உடுவில் வட்டத்தில் சுன்னாகம் சிவன் கோவிலடியில், உடுவில் / சுன்னாகம் கப்டன் றோய்முகாம் திலீபன் முகாம், மாவீரர் முகாம் விக்ரர் முகாம், விளாத்தியடி முகாம், மல்வம் எபிசி முகாம், சண் முகாம், திலீபன் - 1முகாம், திலீபன் 2 முகாம் மல்வம் குடியிருப்பு, உடுவில் மடம் மக்கள் ஆகியோரும் சங்கானை வட்டத்தில் வடக்கம்பரை அம்மன் கோவிலடியில், உதவி அரசாங்க பணிமனை, வர்த்தகர்கள், ஊழியர்கள் ஆகியோரும், சண்டிலிப்பாய் வட்டத்தில் ஆனைக்கோட்டை மூத்தவிநாயகர் கோவிலடியில் மாதர் சங்கம் பீடித்தொழிற்சாலை ஊழியர்களும், கோப்பாய் வட்டத்தில நீர்வேலி கந்தசுவாமி கோவில் முன்றலில் சென் திரேசா மகளிர் கல்லூரி, தோப்பு அருணந்தி வித்தியாலயம், வளலாய் அ. மி. த. க. யில் யங்றோயல், நெப்டியூன் தனியார் கல்வி நிலையங்களும் உடுப்பிட்டி வட்டத்தில் நாவலடி வைரவர் கோவிலடியில் கேம்பிறிஜ் தனியார் கல்வி நிறுவனம், மாணவர்மன்றம், தனியார் கல்வி நிறுவனம் கோபு ச. ச நிலையம், கலைமகள் ச. ச. நிலையம், திருமகள் ச ச. நிலையம் என்பனவும், கலந்துகொள்ளும்.

தென்மராட்சிக் கோட்டத்தில் கைதடி வட்டத்தில், கைதடிச் சந்தியில், இராசபுரி கிராமம், கலைநகர் கிராமம், கைதடி கிழக்கு ச. ச. நிலையம் என்பனவும், சாவகச்சேரி வட்டத்தில் மணங்குணாப் பிள்ளையார் கோவிலடியில் சரசாலை, மட்டுவில், கல்வயல், நுணாவில் தபால் ஊழியர்கள், உ. அ. அ. பணிமனை ஊழியர்களும், கொடிகாமம் வட்டத்தில், 190-ம் கட்டை புகையிரத நிலையத்திற்கு அருகாமையில், மாதர் சங்கங்கள், பாலர் பாடசாலை நிர்வாகிகள், சரம்பைக்குறிச்சி, இடைக்குறிச்சி ச. ச நிலையங்களும், பளை வட்டத்தில் இரட்டைக்கேணி அம்மன் கோவிலடியில், பெரியபளை மக்களும், தென்னந்தோட்ட

### ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

லொறியின் மேலிருந்து ரயர் தவறி வீழ்ந்ததில் துவிச்சக்கர வண்டியில் வந்தவர் காயமடைந்தார்.

மருதனார் மடம் பகுதியில் காங்கேசன்துறை வீதியில் வந்துகொண்டிருந்த எல்வ் லொறி ஒன்றின் மேல் வைக்கப்பட்டிருந்த ரயறே தவறி அவ்வீதியால் சைக்கிளில்வந்து கொண்டிருந்தவர் மீது விழுந்தது.

மேற்படி விபத்தில் தாவடியைச் சேர்ந்த எஸ். பரமேஸ்வரன் என்பவரே காயமடைந்தவராவார். (சி)

### கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

காரைநகரைச் சேர்ந்த சந்த மூர்த்தி ஆனந்தவசந்த குமாரி, சண்முகம் மகாலிங்கம் ஆகியோரது தேசிய அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்,

### இலக்கிய போட்டி பரிசளிப்பு

(யாழ்ப்பாணம்)

தியாகி லெப் கேணல் திலீபனின் 7ஆம் ஆண்டு நினைவை ஒட்டி, விடுதலைப் புலிகளின் மாணவரமைப்பின் மகளிர் பிரிவினரால் நடத்தப்பட்ட இலக்கியப் போட்டியின் யாழ் மாவட்டத்திலான பரிசளிப்பு விழா இன்று காலை 10 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

### ஜெயந்தி விழா

(கொழும்புத்துறை)

சுவாமி சிவானந்தசரஸ்வதியின், 107வது ஜெயந்தி விழா இன்று காலை 8. 30 மணிக்கு சங்கத்தானை, தென்மராட்சி திவ்ய ஜீவன சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது. (24)

### 'மதி ஒளி' வெளியீட்டு விழா

சுன்னாகம், மயிலணிசைவ மகா வித்தியாலயத்தில் மதி மாணவர் கல்வி வளர்ச்சிக் கழகத்தின் மதிஒளி கையெழுத்துச் சஞ்சிகையின் வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 2 00 மணிக்கு இடம்பெறும்,

### பொலிஸ்மா அதிபர் ஓய்வு

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபர் பிராங்

# மீண்டும் காட்டுக்கு துரத்தமுற்படின் ஆயுதம் ஏந்த தயங்கமாட்டேன்

-ஆரிய புளேகொட

(கொழும்பு)

ஜனநாயக நீரோட்டத்துடன் இணைந்துள்ள மக்கள் விடுதலை முன்னணியை மீண்டும் அடக்கி ஒடுக்கி காட்டினுள் துரத்த அரசாங்கம் முற்பட்டால் அதற்கு எதிராக முதலில் நான்தான் ஆயுதம் ஏந்துவேன் இவ்வாறு இலங்கை முற்போக்கு முன்னணியின் செயலாளரான ஆரிய புளேகொட தெரிவித்தார்.

மாத்தறை நகரில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், எமது முன்னணியின் சார்பில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட விபுல குண தமது பாராளுமன்றப் பதவியை துறந்து அவ் இடத்திற்கு கலபத்தியின் பெயரை சிபார்சு செய்துள்ளார். மறைந்திருந்த மக்கள் விடுதலை முன்னணியை ஜனநாயக அரசியல் நீரோட்டத்துடன் கலக்கச் செய்ப வைத்த பாக்கியம் எனக்கு இருக்கிறது.

ஜனநாயகத்தை சரியான முறையில் பாதுகாப்பதற்காக மக்கள் முன்வந்திருக்கும் எம்மை பொதுஜன ஐக்கிய முன்னணி துன்புறுத்தி காட்டினுள் மீண்டும் ஓடவைத்தால் அவர்களுக்கு எதிராக நான்தான் முதலில் ஆயுதம் ஏந்துவேன்.

பொதுஜன ஐக்கிய முன்னணியால் இந்த நாட்டில் எந்த ஒரு பிரச்சினையையும் தீர்த்து வைக்க முடியாது ஒரு போதும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி தனிக்கட்சியாக வந்து ஆட்சியை அமைத்தது கிடையாது. மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த நாம் எப்பொழுதும் மக்களுக்கு ஆதரவாகவே இருப்போம். மக்களைத் துன்புறுத்த மாட்டோம். மக்களின் விடுதலைக்காக ஜனநாயக அரசியலில் இணைந்து செயற்படுவதே எமது குறிக்கோள் மக்கள் விடுதலை முன்னணியினால் தான் இந்த நாட்டில் ஜனநாயகத்தை பாதுகாக்க முடிந்தது. நாம் தேர்தலை மிக அமைதியாகவே கொண்டு சென்றோம். நாம் எந்தக் குழப்பத்திலும் ஈடுபட்டுக் கொள்ளவில்லை. எம்மைப் பற்றி எந்தப் புகாரும் இல்லையென பொலிஸ் மா அதிபரே கூறியுள்ளார். எமது பொறுப்புக்களை மக்களுக்காக நாம் சிறந்த முறையில் செய்து வருகிறோம் எனவும் தெரிவித்தார்.

## ரஞ்சனின் உருவச்சிலை சேதப்படுத்தப்பட்டது

### பிரேமா சிலைக்கு தலை இல்லை

(கொழும்பு)

தெரணியகலையில் அமைக்கப்பட்ட முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னவின் உருவச் சிலை இனந்தெரியாத நபர்களால் சேதப்படுத்தப்பட்டுள்ளது சிலையின் மேற்பகுதி உடைக்கப்பட்டுள்ளது.

தெரணியகலை பஸ் நிலையம் அருகே அமைந்திருந்த ஜனாதிபதி பிரேமதாச சிலையும் சேதமாக்கப்பட்டுள்ளது, சிலையின் தலை காணாமற் போயுள்ளது. இச் சிலைகள் உடைப்பு தொடர்பாக விசாரணைகள் நடைபெற்று வருகிறது.

### இரண்டு வருட காலத்தில்

# 30 மில். பெறுமதியான பொருள்கள் கப்பலில் களவாடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

இரண்டாம் ஈழப்போரில், ஆனையிறவு, பூநகரி போக்குவரத்து பாதைகள் தடுக்கப்பட்டதன் பின்னர், கப்பலிலிருந்து பொருட்கள் கொண்டு வரும் முயற்சிகளில் 92 டிசம்பர் மாதம் வரை, 30 மில்லியன் ரூபா பெறுமதியான பொருட்கள் கையாடப்பட்டிருப்பதாக தெரிய வருகின்றது.

இது தொடர்பாக விசாரணைகளை அத்தியவசிய சேவையாளர் ஆணையகமும், துறைமுக அதிகார சபையும் ஆரம்பித்துள்ளன. இவ்விசாரணைகளில், கடற்படையினரும், இராணுவத்தினரும் உள்ளடங்குவர் எனவும் அறிய வருகின்றது. (நி)

## சேகரிக்கப்பட்ட நிதியை வழங்குவதற்கு முயற்சி

### காலபோக நெற்செய்கை கடன் வழங்கல்

1994/95-ம் ஆண்டு காலபோக நெற்செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு கடன் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனவே இக்காலபோகத்திற்கான நெற்செய்கைக்கடன் பெற விரும்பும் விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள கிராமிய உற்பத்திக் குழுவிடம் அல்லது தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன வட்ட செயலகங்களில் தங்கள் பெயர் விபரங்களை பதிவு செய்து கொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் செய்திக்குறிப்பொன்றின் மூலம் தெரிவிக்கின்றது.

## இளைஞரால் தாக்கப்பட்ட பெண் தலையில் காயம்

(யாழ்ப்பாணம்)

சித்தன்கேணி பால் பண்ணை முகாமைச் சேர்ந்த பெண் ஒருவர் இளைஞர் ஒருவரால் தாக்கப்பட்டதால் தலையில் படுகாயமடைந்தார்.

மேற்படி முகாமில் வசித்து வரும் சி சீதேவி (வயது 29) என்பவரே தலையில் படுகாயத்துக்குஇலக்கானவராவார். (சி)

## கத்தியால் குத்த முயன்ற ஐவருக்கு தண்டனை

(தென்மராட்சி)

பொது சமாதானத்திற்கு கேடு விளைவித்தலும் குற்றமுறையான அச்சுறுத்தலும் செய்த ஐந்து பேருக்கு சாவகச்சேரி நீதிமன்று குற்றப் பணம் கட்டும்படி தீர்ப்பளித்தது.

வரணிப்பகுதியைச் சேர்ந்த மனுதாரர் ஒருவருக்கு இவரின் எதிரியானவர் முன்னர் நீதிமன்றினால் வழங்கப்பட்ட ஒரு வழக்கின் தீர்ப்பின் முடிவை வைத்து மனுதாரருக்கு எதிரி தன்னுடன் நான்கு பேரைச் சேர்த்து இவருக்குக் கத்தியால் குத்த முயற்சித்தார்கள் என்ற மனுதாரரின் வழக்குத் தாக்கலை. அடுத்து நீதியாளர் திரு. சுடர் சாட்சிகளின் அடிப்படையில் நன்கு விசாரித்து ஐவரும் குற்றவாளிகள் எனகண்டு ஒவ்வொருவருக்கும் தலா 1000/- குற்றப்பணமாக கட்டும்படியும் தவறின் தலா 40 நாட்கள் சிறை எனவும் தீர்ப்பளிக்கப்பட்டது. (86)

### அகதிகள் படுகொலை

(கிகாலி)

ருவாண்டாவில், சொந்த நாட்டுக்கு திரும்பும் அகதிகளை அரச இராணுவத்தினர் கொன்றுவருவதாக கிடைத்த தகவல்களையடுத்து அந்த நாட்டிற்கு ஐக்கிய நாடுகள் சபை மேலதிக படையினரை அனுப்பியுள்ளது.

ஐ. நா. படையினர் கனடா, அவுஸ்திரேலியாவிலிருந்து தான்சானியா எல்லைப் பகுதிக்கு அருகாமையிலுள்ள இடங்களுக்கு வந்து சேர்ந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆயிரக்கணக்கான அகதிகள், பழிவாங்கும் நடவடிக்கைக்காக இரகசியமான

### தாயக

திருப்பிய ஏ. எவ்- பி செய்தியாளரை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் வானொலி ஒலி

லயம், வளலாய் அ.மி.த.க- பாடசாலை, கோப்பாய் வர்த்தக சங்கம், ஊரெழு உற்பத்திக் குழு ஆகியனவும், யாழ்-நல்லூர் வட்டத்தில் நல்லூர் கந்தசுவாமி கோவிலடியில் பொதுமக்களும் சனசமூக நிலையங்களும் கலந்து கொள்ளும்

வடமராட்சி கோட்டத்தில் பருத்தித்துறை வட்டத்தில், மந்திகை அம்மன் கோவிலடியில் மந்திகை - தமிழர் புனர்வாழ்வுக் கழகமும், கரவெட்டி வட்டத்தில், துன்னாலை கலிகைக் கந்தன் கோவிலடி

மக்களும், தென்னந்தோட்ட ஊழியர்களும் கலந்துகொள்வர்.

தீவகக் கோட்டத்தில் அரியாலை நாச்சிமார் கோவிலடியில், யா/ப நோ. கூ. சங்கம், புங்குடுதீவுநயி,ப நோ கூ. சங்கம், பனாவெட்டி துரட்டிப்பனை குடியிருப்புகளும் கலந்துகொள்ளும்.

கடற்புலிகள் பிரதேசங்களில், சுழிபுரம் சிறிகணேசா ச. ச. நிலைய முன்றலிலும், உதயபுரம் தும்புத்தொழிற்சாலையிலும் உண்ணாவிரத நிகழ்வுகள் நடைபெறும்

# நிவாரணத்திற்கான மா ரூபா 8 50க்கு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்தவர்களுக்கான ஓஸ்ட் மாத நிவாரண

த்திற்கானமா ரூபா 8.50ற்கு விநியோகிக்கப் படவுள்ளதாக யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதி தெரிவித்துள்ளது.

இதற்கென மா 7-00 ரூபாவுக்கு பல நே. கூ: சங்கடாகளுக்கு விநியோகிக்கப்பங் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனை பல. நோ. கூ. சங். இடம்பெயர்ந்தவர்களுக்கு ரூபா 8.50 ற்கு விநியோகிக்கவுள்ளன. (பா, தி)

## கண்டெடுப்பு

வீதியில் கண்டெடுக்கப்பட்ட திறப்பொன்று எமது ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் வந்து பெற்றுக் கொள்ளவும்.

## முக்கிய அறிவித்தல்

### வடபிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்கங்களின் சமாசம்

தியாகி லெப். கேணல் திலீபன் அவர்கள் ஈகச்சாவடைந்த 7ஆம் ஆண்டு தினமாகிய 26-9-94 திங்கட்கிழமை அன்று அனைத்து பிரிவுகளிலும் இடம் பெறும்உண்ணாநோன்பு, பொதுக்கூட்டங்களில் எமது அனைத்து கிளைகளும், உறுப்பினர்களும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

- கௌரவ செயலாளர்

(9512)

பொலிஸ்மா அதிபர் பிராங் டீ சில்வா அடுத்த வருடம் ஓய்வு பெறவுள்ளார். இவருடன், 17 உதவிப் பொலிஸ் மா அதிபர்களும் ஓய்வுபெறவுள்ளனர்-

## கோட்டரீதியாக

டும் என்ற அவனது கனவை நனவாக்குவோம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

வலிகாமம்/தீவக கோட்டங்களில், நல்லூர் கந்தசுவாமி கோயில்முன்றலிலும், வடமராட்சிக் கோட்டத்தில் மாலிச்சந்தி பிள்ளையார் கோவில் முன்றலிலும், தென்மராட்சிக் கோட்டத்தில் நுணாவில் மணங்குணாப் பிள்ளையார் கோவில் முன்றலிலும், வடமராட்சி கிழக்கில் மாமுனை விளையாட்டுக்கழக மைதானத்திலும் இறுதி நாள் நிகழ்வுகள் இடம் பெறும்.

காலை 7 மணிக்கு, ஈகச் சுடரேற்றலுடன் மாலை அணிவிக்கப்பட்டு ஆரம்ப உரையுடன் உண்ணாவிரதம் ஆரம்பித்து வைக்கப்படும் தொடர்ந்து கவிய ரங்கு பஜனை, பட்டிமன்றம், நினைவுரைகள் என்பனவுடன் பி.ப 4 30 மணிக்கு நிறைவுரையுடன் நீராகாரம் வழங்கி உண்ணாவிரதம் நிறைவு செய்யப்படும். தொடர்ந்து பி. ப. 5 மணிக்கு நினைவுரைகளும், கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

## தியாகி

கள் எழுச்சி பூர்வமாக நடைபெற்றன.

இங்கு வட்டரீதியாக நடைபெற்ற உண்ணாவிரத நிகழ்வில் பல_ம் கலந்து கொண்டனர்.

நேற்றுக்காலை யாழ் சத்திரச் சந்தியிலிருந்து தூக்குக் காவடி, தேர்க்காவடி ஆட்டக் காவடி என்பனவற்றுடன் இருவர் இணைந்து எடுத்த பறவைக் காவடி என்பன ஊர்வலமாக நல்லூரில் உள்ள தியாகி திலீபனின் நிகழ்விடத்திற்கு சென்றடைந்தன. (தி, 22)

# வழங்குவதற்கு முயற்சி

யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்திய சாலைக்கு கண்சிகிச்சைக்கு நவீன உபகரணங்களை வாங்குவதற்குசேகரிக்கப்பட்ட நிதி தொடர்பாக லண்டன், ஹரசியன் நகர பேயர் சின்னமணி, லண்டனில் தங்கியுள்ள யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளருடன் சந்திப்பொன்றை நடத்தியுள்ளார்.

மேற்படி அன்பளிப்புக்கான நிதி லண்டன் வாழ் இலங்கைத் தமிழர்களிடமிருந்து, ஹரசியன் நகரமேயர் சின்னமணி திரட்டியது குறிப்பிடத்தக்கது. (நி)

# மக்கள் ஐக்கிய முன்னணி தேர்தல் குறித்து ஆராயும்

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலில் மக்கள் ஐக்கிய முன்னணி போட்டியிடுவது குறித்து ஆராயும் பொருட்டு அக் கட்சியின் மத்தியகுழு எதிர்வரும் 28ஆம் திகதி கூட இருப்பதாக தெரிய வந்துள்ளது.

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் இக் கட்சியின் உறுப்பினர் எவரும் தெரிவு செய்யப்படாமையினால் இக் கட்சி ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாக கட்சிக்குள்ளேயே இழுபறி நிலைமை ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து இக் கட்சியின் மத்தியகுழு கூட இருப்பதாக மேலும்தெரியவருகிறது.

## ஏயர்பஸ்

தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வுடன்படிக்கை, செலவு கூடியதாயினும், முற்பணமாகவும், அபராதமாகவும் 10 கோடி டொலர்கள் இழக்கப்படுவதை தடுக்கும் முகமாக இவ் விமானக் கொள்வனவை தொடர்ந்தும் மேற்கொள்ள அரசு தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## க. பொ. த.

வருகின்றது.

முன்னைய அரசு பதவியில் இருந்த காலத்திலும் இது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

அரசுகள் மாறிமாறி வரும் போது புதிய கல்வித் திட்டங்கள் அமுல்படுத்தப்படுவது வழமையான நிகழ்வான போதிலும், புதிதாக பதவி ஏற்ற அரசாங்கம் கல்வித் திட்டத்தில் மாற்றம் செய்யப் போவதில்லையென முன்னர் அறிவித்திருந்தது. இருந்தும் அஸ்கிரிய மல்வத்த பீடாதிபதிகள் கேட்டுக்கொண்டதற்கமைய பொருளாதார அபிவிருத்திக்கேற்ப நிலையான கல்வித்திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்துவதற்காக ஆலோசிக்கப்பட்டு வருவதாக அச்செய்திகள் தெரிவிக்கின்றன.

## தேசிய

அமைச்சின் கீழ் செயற்பட்டு வந்தது எனவும் தெரிவித்தார். மேலும் குற்றப் புலனாய்வு பிரிவு, ஜனாதிபதி பிரதமர் மற்றும் அமைச்சர்களின் பாதுகாப்பு பிரிவுகள் என்பன பொலிஸ் மா அதிபரின் கட்டுப்பாட்டின் கீழ் செயற்படுவதாகவும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்தார். மாத்தளை, ஹோமகம, நுகேகொட, நுவரெலியா பொலிஸ் பிரிவுகளுக்கு பிரதிப் பொலிஸ் அதிபர்கள் நியமிக்கப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பொலிஸ் சேவை புனரமைப்பு செய்யப்படும் என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்த நேற்று முன்தினம் கூறியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

வெரித்தாஸ் வானொலி ஒலிபரப்பிய செய்திக் குறிப்புரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் கடலில் சமீபத்தில் லெப். கேணல் நளாயினி தலைமையில் கரும்புலிகள் தாக்குதல் இதற்கு நல்ல எடுத்துக்காட்டு காங்கேசன்கடற்படைமுகாமில் ஊடுருவி பாரிய கடற்படை கப்பலை தகர்த்ததும் பெண்புலி கப்டன்அங்கயற்கண்ணி. இப்படி பெண் புலிகளின் தாக்குதல் ஏராளம்.

யாழ்ப்பாணத்தில் ஒன்பது பொலிஸ் நிலையங்களை நிறுவி வழக்குகளைபுலிகள்தீர்ப்பதன் மூலம் மக்களுடன் நெருங்கி செயற்படுகின்றனர். இதில் ஆச்சரியம். முக்கியமான யாழ்ப்பாண காவல் நிலையத்தில் இன்ஸ்

கைக்காக இரகசியமான முறையில் கொல்லப்படுவதாக ருவாண்டாவிலுள்ள ஐ நா. உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ருவாண்டாவில், தொடரும் இனப்படுகொலைகளில் இதுவரை 5இலட்சம் மக்கள்வரை கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

## கொலை

காவலில் வைக்கப்பட்டுள்ள இளைஞர் ஒருவரிடம் நடத்திய விசாரணையின் போது இவ்விடயம் தெரியவந்துள்ளவுதாகம் கூறப்படுகிறது.

பெக்டராக இருப்பது கௌரி என்றபெண் யாழ் நீதிமன்ற நீதிபதி கூட ஒரு பெண். இப்படி பெண்களின் பங்கை அடுக்கலாம் எனவும் அக்குறிப்புரையில் மேலும் தெரிவிக்கப்பட்டது

## உதயத்தின் நினைவலைகள்....

### லெப். கேணல் அன்பு

| | |
|---|---|
| தமிழீழ மண்ணில் தளிராய்: 1966 - 09 - 25 | தமிழீழ மண்ணில் விதையாய் 1993 - 11 - 12 |

அன்பு:

பெயருக்கேற்ப தளபதியாய்
மணலாற்றில் எம்மை வழி நடாத்தினாய்
களங்கள் பல சென்று வந்தாய்
வெற்றிகள் பல பெற்றுத் தந்தாய்
பூநகரி படை முகாம் சென்றாய்
வெற்றியுடன் வருவாய் என்றிருக்க
வெற்றிதனைப் பெற்றுத் தந்துவிட்டு
எதிரியின் கொடிய குண்டதனை
வீரர்க்கழகாய் மார்பிலே தாங்கி
மாவீரர் வரிசையிலே சேர்ந்த—உன்
பாதச் சுவட்டின் வழியே—நீ
வளர்த்த போராளிகள்—நாம்
தளராது முன்னேறுகின்றோம்
தலைவரின் தலைமையில்
தமிழீழம் அமைப்பதற்காய்

''நன்றி''

(சி-10411) - மணலாற்றுப் போராளிகள்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி; 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1994ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது